www.tamilarangam.net

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE FRANCE

# மனிதம்

17



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இவர்கள் யார்?



Rajiv Gandhi (இறப்பு)
**இந்தியா**
2.5 மில்லியார்ட்டன் பிராங்குகள்



Haile Selassie (இறப்பு)
**எதியோப்பியா**
22.5 மில்லியார்ட்டன் பிராங்குகள்
பல நாட்டு வைப்பில் இடப்பட்டு ள்ளது.பெரும் பகுதி சுவிசில்.



Jaafar Numeiri
**சூடான்**
34 மில்லியன் பிராங்குகள்
1985 வரை



Saddam Hussein
**ஈராக்**
700 இலிருந்து 800 மில்லியன் பிராங்குகள்



Anastasio Somoza (இறப்பு)
**நிக்கரகுவா**
பணத்தின் பெரும்பகுதி 750 மில்லியன் பிராங்குகள்



Jean-Claude Duvalier
**கைட்டி**
750 மில்லியன் பிராங்குகளில் பெரும்பகுதி சுவிசில்

சுவிசு வங்கிகளில் மூன்றாம் உலகநாடுகளின் பணங்கள் 250 இலிருந்து 300 மில்லியார்ட்டன் பிராங்குகள் வரை இரகசியக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளன. இக்கணக்கெடுப்பினை அமெரிக்காவின் MC KINSEY என்ற ஆலோசனை நிறுவனம் கணக்கெடுத்துள்ளது.

www.tamilarangam.net

# மனிதம்



ஆடி
+
ஆவணி

1992

ஒலிவ்மரக் கிளைகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது துப்பாக்கி;

சமாதான புறாவின் சிறகுகளை வெட்டிய ரத்தம்தோய்ந்த கத்தியுடன் சமாதான ஒப்பாரியிடும் பிரேமதாசா
சமாதானம் = போர் என்ற சமாந்தரக் கோடுகளுக்கிடையில் வாழ்வை இழந்து நிற்கும் தமிழ் மக்கள்
தாக்குதல், யுத்தநிறுத்தம், சர்வகட்சி, தீர்வு, ஆலோசனை, சமாதானம், . . .
. . . போன்ற அலுத்துப்போன வார்த்தைகளால் பக்கங்களை நிரப்பும் பத்திரிகைகள்
இவைதான் ஈழத்தில் பிந்திய நிகழ்வுகள்.

புத்தருக்குப்பின் அதிகஅளவு '' சமாதானம் '' என்ற சொல்லை உச்சரிப்பவர் பிரேமதாசாவைவிட யாரும் இருக்க முடியாது.
முன்பு தாக்குதல் பின் யுத்தநிறுத்தம் பேச்சுவார்த்தை (இடைக்காலத்தில் போர்தயாரிப்பு ) பின்பு தாக்குதல்கள், . . . . . . . .
இப்போ தாக்குதல்களும், சமாதானப் பேச்சுக்களும் ஒரே சமயத்தில் நடைபெறும். இப்புதிய விதியில் முதலாம் கட்ட வடபகுதி '' சமாதானம் '' முடிந்து இரண்டாம் கட்ட '' சமாதானம் '' நடக்கிறது.
பிரேமதாசாவின் விதியில் இன்னொன்று புலிகள் அழிப்பு = தமிழ் மக்கள் அழிப்பு! இன்று நடைபெறுகின்ற யுத்தத்தில் ஆயிரக்கணக்கில் புலிகளை கொன்றுவிட்டதாக! அரசு அறிவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது.

கொழும்பு நிகழ்ச்சிகள் வெறுமாதிரி!
பா. தெ. கு (பாராளுமன்ற தெரிவுக்குழு) இனங்களுக்கிடையில் இணக்கமான தீர்வுக்கு முயற்சிக்கிறதாம் அதற்கு புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்கள் தங்களது தீர்வுகளை காவித்திரிகின்றன.

முன்பு தொண்டமான் வைத்த தீர்வு, அதற்கு இனவாத "கவரிமான்" களின் கண்டனங்கள்... பின்பு புத்தபிக்களின் தீர்வுகள் - யாழ் விஜயம்... இப்போ பா. ம. தெரிவுக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் தீர்வுகள்.
இப்படி. தீர்வுகள்..... தீர்வுகள்..... தீர்வுகள்.. ! !
தீர்க்கப்படாமலே போய்விடுகின்றன.

Nur für Freundkreise

MANITHAM
POSTFACH 12
3000 BERN 11
SWITZERLAND

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*சந்தாவிபரம் *

தனிப்பிரதி 3 Sfr.
ஒருவருடம் 22Sfr.
ஐரோப்பிய நாடுகள்
25 Sfr.
(தபால் செலவு உட்பட)

வங்கிக்கணக்கு
இல: -
Spar Konto
0094-157146-60-1

வங்கி முகவரி: -
Bucher Verkauf
SCHWIZERISCHE
KREDITANSTALT

SWITZERLAND

**வடக்கில் 2ம் கட்ட இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டபின் அரசு தரப்பில் இரு முக்கிய இழப்புக்கள் :**

1. 19 உயரதிகாரிகளும் ஏராளமான வெடிமருந்துகளும் ஏற்றிச்சென்ற வடபகுதி தாக்குதல்களுக்கு பயன்படுத்தப்படும் சீனத்தயாரிப்பு விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியது. இதை புலிகள் தாமே சுட்டு வீழ்த்தியதாக உரிமை கோரியுள்ளனர்.

2. சிங்களவர் வாழும் பகுதிகளில் பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்த கட்டுப்பெத்த இராணுவமுகாம் புலிகளால் தாக்கப்பட்டுள்ளது.

அரசுதரப்பில் இவை பாரிய இழப்புக்களாகவே கருதப்படுகின்றன. இனி சிலவேளைகளில் அடுத்த தயாரிப்புக்களில் இறங்கும் வரைக்கும் அகிம்சை, சமாதானம் பற்றி பிரேமதாசா அடிக்கடி கதைப்பார் என்று எதிர்பார்க்கலாம்!

**அதே வேளை சர்ச்சைகள் எழுப்பும் புலிகள் பற்றிய தகவல்கள் :**

நடைபெற்ற விமானதாக்குதலுக்கு ஆப்கான் கெரிலாக்கள் ரசியாவுக்கு எதிராக பயன்படுத்திய "ஸ்ரிஞ்சர்" ஏவுகணைகளை புலிகள் பாவித்திருக்கலாம் என்று இலங்கை இராணுவ உயர்பீடம் சந்தேகிக்கிறது.

புலிகளுக்கு ஆயுதவிநியோகத்தில் ஈடுபட்டவர் என்ற சந்தேகத்தின்பேரில் சுவிற்சர்லாந்து அதிகாரி ஒருவர் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். பாக்கிஸ்த்தானின் நான்கு கப்பல்களை புலிகள் ஆயுதம் கடத்துவதற்கு பயன்படுத்தினர்.

இவைகள் உண்மையாயின் புலிகள் விடயத்தில் மேற்கு நாடுகள் ஒரு நோக்கோடு செயற்படுவதாகவே கருத இடமுண்டு. இதற்கு கருத்தியல் ரீதியில் ஆதரவுதேடும் முயற்சிகளும் நடைபெறுகின்றன. இலண்டன் B. B. C யில் ஒளிபரப்பப்பட்ட "தற்கொலை கொலையாளிகள்" (Suicide Killers) என்ற புலிகள்பற்றிய விபரணப்படம் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு அண்மையில் சுவிசிலும் ஒளிபரப்பப்பட்டது. மேலும் இன்று மேற்கத்தய செய்தி தொடர்பு சாதனங்கள் புலிகள் விடயத்தில் கரிசனையோடு செயற்டுவதை அவதானிக்க முடிகின்றது.

* * *

**புலிகள்மீதான தடை !**

இந்தியாவில் புலிகள் செயற்படுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஜெயலலிதா, வாழப்பாடி போன்றோரின் தூண்டுதலின் பேரிலேயே இந்திய அரசு இத்தடையை அறிவித்துள்ளது. இதன் மூலம் ஜெயலலிதா தனது அரசியல் எதிரிகள் புரட்சியாளர்கள், ஜனநாயக சக்திகள், இனவிடுதலை அமைப்புக்களை சேர்ந்தோர் எல்லோரையும் புலிகள் ஆதரவாளர் என்ற பெயரில் ஒடுக்கி தனது அதிகாரத்தை நிலைநிறுத்த முயற்சிக்கிறார்.

புலிகள் மீதான இந்திய அரசின் தடையை மற்றைய இயக்கங்கள் மகிழ்ச்சியுடன் ஆதரித்துள்ளன. கடந்த காலங்களில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையில் உளசுத்தியுடன் செயற்படாத இந்திய அரசு புலிகள் மீது விதித்திருக்கும் இந்த தடையை இவர்கள் விழுந்தடித்துக்கொண்டு ஆதரிப்பதானது இவர்கள் தமிழ் மக்களிற்கு செய்யும் மீண்டும் ஓர் துரோகமாகும்.

காலத்திற்குக்காலம் இந்திய அரசியல் சக்திகள் தங்கள் தேவைகளுக்கு ஏற்றவாறு இயக்கங்களை நகர்த்தி வந்தது எல்லோரும் அறிந்ததே. தங்களது நோக்கங்கள், அதிகாரங்களுக்கு கட்டுப்பட்டு நடக்க முன்வாராதபோது புலிகளை இந்திய அரசு தடைசெய்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒடுக்கப்படும் ஓர் இனம் தன்மீது தொடுக்கப்பட்டிருக்கும் ஒடுக்குமுறைக்கு எதிராக போராடுவதை யாரும் தடை செய்யமுடியாது ; அந்த உரிமையும் கிடையாது – இந்திய அரசிற்கும்தான் ! அதேநேரம் ஒடுக்கப்படும் எம் இனத்துக்குள்ளேயே இன்னொரு சிறுபான்மை இனத்தை (முசுலீம் மக்களை) நசுக்கி, மக்களின் அடிப்படை உரிமைகளை பறித்து அதிகாரத்துவத்துடன் நடக்கும் புலிகள் ஜனநாயக சக்திகளை கோரமாக ஒடுக்குகிறார்கள். தேசபக்தர்கள் புத்திஜீவிகள் என்போரைக்கூட விட்டுவைக்கவில்லை அவர்களையும் தேடி அழிக்கின்றனர் ; "கைதுசெய்து" சிறையில் அடைக்கின்றனர். ஈழத்தில் மாற்றுக்கருத்துள்ள சகல இயக்கங்களையும் இயங்கவிடாது தடைசெய்துள்ளனர்.

மொத்தத்தில் தமது சொந்த நலனுக்கான இந்த தடைகள் எல்லாமே மக்கள் தமது வாழ்வுக்காக போராடும் உரிமைகளை பறிப்பதாகும். கடந்தகாலங்களைப்போல் இந்த அடிப்படை ஜனநாயக உரிமைகளை நாம் உணர்ந்துகொள்ளத் தவறுவதும், விட்டுக்கொடுப்பதும், வரலாற்றில் எம்மை இன்னும் பின்தள்ளிவிடும் – எமக்கிடப்பட்டிருக்கும் விலங்கினை இன்னமும் நாமே இறுக்குவதாகும் !

# ஏது தவறு? ஏது சரி?

இன்று எமக்கு தவறாக இருப்பதும், நியாயமற்று காணப்படுவதும் இன்னோர் சமுதாயத்தில் அல்லது வேறோர் சூழலில் எமக்கே சரியாகவும் நியாயமாகவும் இருக்கக்கூடும். அந்தந்தகாலங்களில் நடைபெறும் சரிகள், தவறுகள் அவ்வவ் சூழலில்வைத்தே மதிப்பிடவேண்டும். இதை இப்படி விளக்குகிறார் அந்தோனியோ கிராம்ஸி: –

**நாம் இப்படி கற்பனை செய்து பார்ப்போம் ஒரு கப்பல் உடைந்து கடலில் மூழ்கிறது. அதில் இருந்த சிலர் சிறு படகில் தப்பிசெல்கின்றனர். அவர்களுக்கு எங்கு, எப்படி, யாரால் இனிக்காப்பற்றப்படப்போகிறோம் என்று தெரியவில்லை. கப்பல் மூழ்குவதற்கு முன் யாரும் இத்தகைய விபத்துக்கு ஆளாகுவோம் என்று நினைத்துக்கூடப்பார்த்திருக்க மாட்டார்கள். கப்பல் மூழகும் தருவாயில் தாம் என்ன செய்யக்கூடும் என்பதைப்பற்றிய எண்ணம் அவர்களிடம் சிறுதுகூட இருந்திருக்காது.**

**உதாரணமாக நரமாமிசம் உண்பதற்கு தாம் ஆளாகவேண்டிவரும் என்பதைக்கூட அவர்கள் சிறிதும் நினைத்திருக்கமாட்டார்கள். இப்படி பட்ட நிலையில் நீங்கள் நரமாமிசம் உண்பீர்களா அல்லது செத்துமடிவீர்களா என்று விபத்து நடப்பதற்கு முன்பு அவர்களை கேட்டிருந்தால் அவர்கள் எல்லோரும் நரமாமிசம் உண்பதைவிட சாவதே மேல் என்று கூறியிருப்பர். இப்போ கப்பல் உடைந்துவிட்டது. அவர்களும் தப்பி செல்கிறார்கள். சில நாட்களாகிவிட்டது சாப்பாட்டுக்கும் வேறு வழியில்லை இப்போ நரமாமிசம் உண்பதை அவர்கள் வேறுவிதமாகபார்கிறார்கள். அதற்கு தங்களை மாற்றிக்கொண்டுவிட்டார்கள் இத்தகைய சூழல் அவர்களிற்கு நியாயமானதாக தோன்றுகின்றது.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐரோப்பிய ஒன்றியம் EG / EC

யூன் 2 ம் திகதி டென்மார்க்கில் நடந்தேறிய அபிப்பிராய வாக்கெடுப்பின் பெறுபேறுகளின் விளைவால் ஐரோப்பிய ஒன்றியம்(EG) பற்றிய செய்திகள் குடுபிடிக்க ஆரம்பித்துவிட்டன.

இன்றைய நிலைமைகளுடன் ஐரோப்பிய ஒன்றியத்தினை( E G ) ஒப்பிட்டு பார்ப்பதற்கு முன்னர் ஐரோப்பிய ஒன்றியத்தின் தோற்றம் பற்றியும் இதுவரை காலமும் நடைமுறையில் இருந்த ஏனைய பொருளாதார உடன்படிக்கைகளையும் பார்க்கவேண்டிய தேவையுள்ளது.




மேற்காணும் படத்தில் உள்ளது போல் ஐரோப்பியநாடுகள் மூன்று உடன்படிக்கையின் கீழ் அணி சேர்ந்துள்ளன. கிழக்கு ஐரோப்பிய நாடு களில் யூகோசிலாவையும் அல்பானியாவையும் தவிர ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் பழைய சோவியத்யூனியனும் இணைந்து 1949ம் ஆண்டு "பொருளாதார பரஸ்பர ஆலோசனை அமைப்பு" (RGW) எனும் உடன்படிக்கையின் கீழ் சோவியத்யூனியனில் கைச்சாத்திட்டனர். கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களின் பின் அதாவது 91களுக்குப் பின்னர் இவ் ஒப்பந்தம் நடைமுறைக்கு சாத்தியமற்றுப் போய்விட்டது. இன்று இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஒரு சில கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்துடன்(EG) இணைய முன்வந்துள்ளனர்.

ஐரோப்பிய திறந்த வர்த்தக கூட்டமைப்பு(EFTA) எனும் ஒப்பந்தம் 1960 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டது. இவ் ஒப்பந்தத்திற்கு சுவிற்சலாந்தே முன்நின்றது. தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில்( E G ) அங்கம் வகிக்கும் போர்த்துக்கல்லும்,பிரிட்டனும் இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஐரோப்பிய ஒன்றியத்திடம்(EG) உள்ளது போன்று ஐரோப்பிய நாடுகளை ஒருங்கிணைக்கும் திட்டம் ஏதும் இவ் உடன்படிக்கையில் இருக்கவில்லை. இவ் உடன்படிக்கை தற்போது மரணப் படுக்கையில் உள்ளது.


ஐரோப்பிய ஒன்றிய(EG) ஒப்பந்தத்தில் ஆரம்பத்தில் 6 நாடுகளே கைச்சாத்திட்டிருந்தனர்.அவையாவன ஜேர்மன்,பிரான்சு,இத்தாலி,பெல்ஜியம்,ஒல்லாந்து லக்சம்போர்க். இன்று 12 நாடுகள் அங்கத்துவம் பெறுகின்றன. இவ் ஒன்றியத்திற்கான ஒப்பந்தம் மூன்று வேறுபட்ட ஒப்பந்தங்கள் மூலமே உருவாகியது. அவ் ஒப்பந்தங்களாவன:

-(EGKS தோற்றம்1951) நிலக்கரி,எஃகுக்கான ஐரோப்பிய பொருளா தார உடன்படிக்கை.

-(EWG தோற்றம் 1957) ஐரோப்பிய பொருளாதார ஒருங்கிணைப்பு ஒப்பந்தம் ரோமில் கைச்சாத்திடப்பட்டது.

-Euratom (ஐரோப்பிய அணு ஒருங்கிணைப்பு) இவ் ஒப்பந்தமும் 1957 இல் ரோமில் கைச்சாத்திடப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியம்( E G ) நடைமுறைக்கு வருமாயின் ஏற்படப்போகும் அனுகூலம் பிரதிகூலங்களைப் பற்றி (ஐரோப்பிய) கட்சி களும் சமூக அமைப்புக்களும் பத்திரிகைகளும் விவாதித்து வருகின்றன. டென்மார்க் மக்கள் ஐரோப்பிய ஒன்றியத்தின் (EG) ஐரோப்பிய நாடுகளின் ஒருங்கிணைப்பு ஒப்பந்தத்தினை ஏற்க மறுத்து விட்டனர் என்பதனை வாக்கெடுப்பு முடிவுகள் காட்டுகின்றன.




மேற்காணும் மூன்று சர்வஜன வாக்கெடுப்புக்களின் பெறுபேறுகளில் இருந்து பார்க்கும் போது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

டென்மார்க்கில் ஐரோப்பிய ஒன்றியத்தினை(EG) ஆதரிப்போரின் எண்ணிக்கையை விட எதிர்ப்பவரின் எண்ணிக்கையே அதிகரித்து வருவதினை பார்க்கக் கூடியதாக உள்ளது.இறுதியாக நடந்த டென்மார்க் சர்வசன வாக் கெடுப்பில் 60% பெண்களும், 60% சமூக ஜனநாயகவாதிகளும் பங்கு பற்றியுள்ளதாக பத்திரிகை புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இந்நிலைக்கு அதிதீவிர வலதுசாரிகளினதும் இடதுசாரிகளினதும் பிரச்சாரமே காரணம் என ஐரோப்பிய பத்திரிகைகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளன.

ஒவ்வொரு ஐரோப்பிய நாட்டவர்களும் ஐரோப்பிய ஒன்றியம் பற்றி வெவ்வேறான அபிப்பிராயத்தினை கொண்டுள்ளனர். இவ்வாண்டு யூன் 18 இல் அயர்லாந்து மக்கள் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒருங்கிணைப்புத் திட்டத்திற்கு ஆதரவாகவே வாக்களித்துள்ளனர். பொதுவாக ஸ்கண்டிநேவிய நாடுகளில் உள்ளதுபோல் சமூக உதவிகள் கூடியதும், குறைந்த நேர வேலையும் மற்றைய நாடுகளில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரான்சு,அயர்லாந்து,டென்மார்க் ஆகிய மூன்று நாடுகளே இவ் ஒப்பந்தம் சம்பந்தமாக சர்வசன வாக்கெடுப்பு நடத்துவதாக தீர்மானித்து இருந்தன. பிரிட்டன்,ஒல்லாந்து,பெல்ஜியம்,லக்சம்போர்க்,ஜேர்மனி,கிரேக்கம்,இத்தாலி,ஸ்பெயின் போர்த்துக்கல் ஆகிய நாடுகள் பாராளுமன்ற பெரும்பான்மையின் அங்கீகாரிப்பைப் பெற்றிருந்தனர். பிரான்சில் வருகின்ற செப்டம்பரில் நடைபெறப் போகும் சர்வசன வாக்கெடுப்பு பற்றிய அபிப்பிராய கணிப்பு ஒன்றை ஓர் Institute சேகரித்துள்ளது. பிரான்சிய நாட்டவர்களில் 69% இனர் "ஆம்" எனவும் 31% இனர் "இல்லை" எனவும் வாக்களிக்க இருப்பதாக அறிவித்துள்ளது. மேலும் இத்தேர்தலில் 58% வீதமான பிரான்சு நாட்டவரே பங்கு பற்றலாம் என ஊகிக்கப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியம்(EG) தனியே பொருளாதார நலன் கருதி மட்டுமே ஒன்றிணைய முற்படுகின்றன. அமெரிக்க,ஜப்பானிய சந்தையுடன் போட்டி போடும் ஓர் திட்டமாகவே பார்க்க வேண்டியுள்ளது.




மேற்காட்டிய வரைபடத்தில் உள்ளது போல் அமெரிக்க மொத்த தேசிய உற்பத்தி 5470 மில்லியார்டன் டொலர் ஆகவும் மக்களின் தொகை 251 மில்லியன்களாகவும் ஜப்பானிய மொத்த தேசிய உற்பத்தி 2970 மில்லியார்டன்களாகவும் மக்கள் தொகை 124 மில்லியன்களாகவும் உள்ளது. ஐரோப்பிய ஒன்றியமும்(EG), ஐரோப்பிய திறந்த வர்த்தக கூட்டமைப்பும்(EFTA) இணைந்தால் ஐரோப்பிய பொரு ளாதார சமூகம்(EWR) ஆகும். இச்சமூகத்தின் மொத்த தேசிய உற்பத்தி 7030 மில்லியார்டன் டொலராகவும் மக்களின் தொகை 377 மில்லியன்களாகவும் உள்ளதாக 1990 ஆம் ஆண்டு கணிப்புக்கள் தெரிவிக்கின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின்(EG) ஐரோப்பிய நாடுகளுடன் இணைவு ஒப்பந்தத்தின் கீழ் ஐரோப்பிய நாடுகளிற்கிடையே பொதுவான நாணய புழக்கம் நடைமுறைப்படுத்தப்படும். இந்நாணயம் ECU (ஐரோப்பிய நாணய ஒருங்கிணைப்பு) என அழைக்கப்படுகின்றது. மேலும் தடையற்ற சந்தை முறையும் அமுலுக்கு வர இருக்கின்றது. இத்தடையற்ற சந்தை பின்வரும் நான்கு விடயங்களின் கீழ் செயற்படப் போகின்றது.

1. தடையற்ற தனியார் பிரயாணம்
2. தடையற்ற பொருள் பரிமாற்றம்
3. தடையற்ற போக்குவரத்து
4. தடையற்ற மூலதன பரிமாற்றம்

தடையற்ற தனியார் பிரயாணத்தின் கீழ் ஐரோப்பியர் எந்த ஒரு ஐரோப்பிய நாடுகளிலும் வேலை செய்யும் உரிமை வழங்கப்படுகின்றது. மூன்றாம் உலக தொழிலாளிகள் புறக்கணிக்கப்பட்டு ஐரோப்பியருக்கே முன்னுரிமை வழங்கப்படப் போகின்றது. இவ்வாறு தடையற்ற தனியார் பிரயாணங்கள் ஐரோப்பியருக்கு மட்டுமே. மூன்றாம் உலக நாடுகளில் இருந்து வரும் ஓர் பிரயாணி தகுந்த காரணமின்றி ஐரோப்பிய நாடுகளிற்குள் உட்பிரவேசிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே அகதிகள் ஐரோப்பிய நாடுகளிற்குள் உட்புகுவதை தடுப்பதற்கான பல ஒப்பந்தங்களில் அனைத்து ஐரோப்பிய நாடுகளும் பாரபட்சமின்றி கைச்சாத்திட்டுள்ளன. ஓர் அகதி விண்ணப்பதாரர் எந்த ஒரு ஐரோப்பிய நாட்டில் அரசியல் தஞ்சம் கோரினாலும், அவ்விபரங்கள் யாவும் அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் பதிவு செய்யப்படும் வகையில் வலைபின்னல் வடிவிலான கணணி வேலைமுறைகளை நடைமுறைப்படுத்தியுள்ளன.

தடையற்ற போக்குவரத்தின் கீழ் காப்புறுதி, வங்கி, தொலைத்தொடர்பு, சந்தைப்படுத்தல் போன்றவற்றிற்கு பொதுவான சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதனால் அனைத்து நாட்டு வங்கிகளின் ரகசியங்கள் பொதுவாகவே பேணப்படும். இக்காரணத்தாலும் சுவிற்சர்லாந்து ஐரோப்பிய ஒன்றியத்துடன்(EG) இணைய பின் நின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவை எல்லாவற்றிற்கும் பொதுவாக ஐரோப்பிய நாடுகளிற்கிடையே சுங்ககட்டுப்பாடு தளர்த்தப்படப் போகின்றது.


இவ்வாறு சுங்கக்கட்டுப்பாடு தளர்த்தப்படுவதால் ஐரோப்பிய விவசாயிகளும் சிறுகைத்தொழில் நிறுவனங்களும் பாதிப்புக்கு உள்ளாகப் போகின்றன. உதாரணமாக தோடம்பழம் ஸ்பெயினில் குறைந்த விலையில் உற்பத்தி செய்யப்படுமாயின் அனைத்து ஐரோப்பிய நாடுகளும் ஸ்பெயினில் இருந்தே தோடம்பழம் கொள்வனவு செய்யும். இதனால் உள்நாட்டு தோடம்பழ உற்பத்தியாளன் இவ்விலையுடன் போட்டி போட்டு தனது பொருளை சந்தைப்படுத்த முடியாமல் முடக்கப்படுவான். இதனால் ஒவ்வொரு ஐரோப்பிய நாடுகளும் குறிப்பிட்ட பொருளையே உற்பத்தி செய்யும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படும். இன்று கைத்தொழில் நாடுகளாக உள்ள ஜேர்மன்,பிரான்சு,பிரிட்டன் தமது தொழிற்சாலைகளை ஏனைய பஞ்சப்பட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு வேலை அளிப்பதாக கூறிக்கொண்டு அங்கு நிறுவும். இதனால் அந்நாடுகளில் சூழல் மாசடையும் அபாயமும் உள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தில் கைத்தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளின் ஆதிக்கமே மேலோங்கும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. பஞ்சப்பட்ட ஸ்பெயின்,போர்த்துக்கல் போன்ற ஐரோப்பிய நாடுகள் தனியே விவசாய உற்பத்திக்கென தள்ளப்படும் வாய்ப்பும் இவ் ஒன்றியத்தில் ஏற்படும் என்பதனை பார்க்கக் கூடியதாக உள்ளது.


ஐரோப்பிய விவசாயிகள் GATT (பொதுவான சுங்க வர்த்தக உடன்படிக்கை ) ஒப்பந்தத்திற்கு எதிராக கடுமையான எதிர்ப்புப் போராட்டங்களை ஆங்காங்கே நடாத்திவருகின்றனர்.

ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில்(EWR) பிரிந்து செல்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிந்து செல்ல இயலாது. இதனால் இவ் ஒன்றியத்தின் ஒவ்வொரு ஐரோப்பிய தேசிய இனமும் தத்தம் தனித்துவத்தை பாதுகாப்பதற்கான உறுதியான சட்டங்கள் எதுவும் காணப்படவில்லை. மேலும் மக்களின் உரிமை என்று பார்க்கும் போது தேர்தல்,சர்வசன வாக்கெடுப்பு போன்ற விடயங்கள் தெளிவாக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. சர்வதேசவாதிகளில் ஒரு பகுதியினர் ஐரோப்பிய ஒன்றியத்தினை ஆதரிக்கின்றபோதும் மேற்குறிப்பிட்ட உரிமை உத்தரவாதப்படுத்தப்படாததால் அஞ்சுகின்றனர்.

சுவிற்சர்லாந்து சமஷ்டி பாராளுமன்றம் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதை ஆதரித்துள்ள போதும் மக்களின் அபிப்பிராயம் எப்படி உள்ளது என்பது தெளிவற்றே உள்ளது. பொதுவாக சுவிசு மக்கள் தனித்துவத்தையே பேண விரும்புபவர்கள். இதனை ஐக்கிய நாடுகள் சபையுடன்(UNO) இணைவு பற்றி நடந்த தேர்தலில் பெரும்பான்மையினர் இணைவு தேவையில்லை என வாக்களித்து நிரூபித்துள்ளனர். அதே நேரம் தாம் ஒரு சிறிய நாடாக இருந்து கொண்டு ஐரோப்பிய ஒன்றியத்தில் சேராமல் இருந்தால் எழக்கூடிய பாதிப்புகளின் மீது அச்சம் கொண்டுள்ளனர்.

எது எப்படி இருப்பினும் சுவிற்சர்லாந்தினை அழுத்தும் வாடகை உயர்வு, வீட்டுப் பற்றாக்குறை ஆண்களிற்கும் பெண்களிற்கும் சமமற்ற ஊதியம்,உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு போன்றவற்றிற்கு ஐரோப்பிய ஒன்றியம்(EG) தீர்வு வழங்கும் என எதிர்பார்க்கிறார்கள். கீழ் காணும் வரைபடங்களில் ஐரோப்பிய நாடுகளில் ஆண்களுக்கும் பெண்களுக்குமான சம்பள வேறுபாட்டினையும் ஐரோப்பிய நாடுகளில் நடைமுறையில் இருக்கும் வாடகை வீதங்களையும் காணலாம். சுவிற்சர்லாந்தில் நடைமுறையில் இருக்கும் வாடகையைப் போல எந்தவொரு ஐரோப்பிய நாடுகளிலும் இல்லை என்பதை அறியக்கூடியதாக உள்ளது.




32ம் பக்கம்

www.tamilarangam.net

# ஒரு நினைவு

பல தூரமைல்கள்
பகல்களும்
இரவுகளும்
நிலவும்
உன்னையும்
நம் தேசத்தையும்
சிறிது சிறிதாய்
ஞாபகப் படுத்தும்

அந்த இளமையில்
பயமறியாத
பள்ளிப்பருவங்கள்

உன் சீருடையில்
மை தெளித்து
மற்றவனை மாட்டிவிட்டு
நான் மட்டும் உன்னிடம்
நல்லவனாய் நடிப்பேன்

அப்போது தான்
முதலில் சிரித்தாய்
பின்பு – – –பின்பு – –
நீண்ட பொழுதுகள்
நித்திரையில்லாமல் – – –

இந்தியன் ஆமியை
முன் போகவிட்டு
பின்னால்
மதில் பாய்ந்து
உனைப்பார்க்க வருவேன்
அப்போ
மரணமென்பது
மாற்றுச் சொல்லாய்த் தெரியும்

சில வேளைகளில்
காதல் கண்ணைமறைக்கும்
உண்மை தானோ ?

காலமும்
கருத்துக்களும்
நம்மை
மிகவும் சோதித்தன

சமாதானத்திற்காக
பிணங்களிடம்
சமாதிகள்
பேட்டி எடுத்தன

நிர்ப்பந்தங்கள்
துரத்தியடித்தன

குளத்துக் கரைகளில்
குந்தியிருந்ததையும்
களங்கட்டி வலையில்
களவாய் மீன் எடுத்து
சுட்டுத் தின்றதையும்
மறக்காமல் மறந்துவிட்டு ,
ஏன்
உன்னையும் தான் !

இங்கும்
நீண்ட பொழுதுகள்
நித்திரையில்லாமல் – – –

உன்னால்
எத்தனை நாள்தான்
பதுங்கு குழியினுள்
மெழுகுதிரி வெளிச்சத்தில்
என்
கடிதத்தை வாசிப்பது ?

நண்பனின் கடிதம்
உன்னைக் காணவில்லையாம் !

நீ எங்கேயென்று
எமக்குத் தெரியும்
என்
மூச்சுக்குத் தெரியும்
ஏனெனில்
அது வெப்பமாய் வெளியேறிற்று.

– ஆனந்தி –



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வானமே எல்லை!

# பாலச்சந்தர் கொள்கை!!

நீண்ட நாட்களுக்குப் பின் சமூகப் பிரச்சனையை தொட்டு பாலச்சந்தரின் இயக்கத்தில் வெளி வந்திருக்கும் படம்தான் **வானமே எல்லை.** வழமை போலவே நடுத்தர இளைஞர்களின் கதையையே கையாண்டிருக்கிறார். ' அரங்கேற்றம் ' முதல் 'அவள் ஒரு தொடர் கதை ' வரை தனது திரைப்படங்களுக்கு நடுத்தரக் குடும்பங்களையே சுற்றி வந்த பாலச்சந்தர் "தண்ணீர் தண்ணீர்..." "வறுமையின் நிறம் சிவப்பு" "அச்சமில்லை அச்சமில்லை" போன்ற படங்களின் மூலம் குடும்பம் என்ற வட்டத்தை விட்டு சமூகம் என்ற பரப்புக்கு வருகிறார். இதன் மூலம் அவை பற்றிய தனது பார்வையையும் வெளிப்படுத்துகிறார். இவற்றில் "தண்ணீர் தண்ணீர்" சற்று விதிவிலக்காயினும் மற்றயவை அவரைப் பற்றிய அளவுகோலாகும். இத்தகைய பிரச்சனைகளை தொட்டு கதை பண்ணுவதாலேயே தமிழ் திரையுலகம் "புதுமை இயக்குனர்" என்ற அடைமொழியுடன் அவரை அழைத்து வருகிறது. அப்படி அவர் என்ன புதுமையை,புரட்சியை தமிழ்த்திரையுலகில் ஏற்படுத்திவிட்டார். "பிரெஞ்சு புதிய சினிமா இயக்கத்தின்" படைப்பாளிகளைப் போல சினிமா என்ற மீடியாவின் போக்கையே தலைகீழாக மாற்றினாரா? அல்லது வங்காள திரைப்பட மேதை சத்தியஜித்ரேயைப் போலாவது வாழ்ந்தாரா? இல்லை! மாறாக வழமையான தமிழ் சினிமாக்களிலிருந்து சற்று வித்தியாசமாக கதைக் கருவையும், கதை சொல்லும் பாணியையும் மேற்கொண்டு வருகிறார். இதை நான் மறுப்பதற்கில்லை. தன்னைப் பற்றிய இந்த மதிப்பை காப்பாற்றிக் கொண்டே மறுபுறத்தில் தனது சொந்த படநிறுவனமான கவிதாலயாவை வைத்து மசாலாப் படங்களை உற்பத்தி செய்து வருபவர்தான். "புதுமை இயக்குனரான" கே.பாலசந்தர். புதுமை இயக்குனர் என்ற மதிப்பை காப்பாற்றுவதையும் வசூலில் சாதனை புரியாவிட்டாலும் நட்டமடையாமல் இருப்பதையும் நோக்கமாகக் கொண்டு வெளியிட்டு இருக்கும் படம் தான் "வானமே எல்லை"

இத்தகைய திரைப்படங்கள் குறித்து அக்கறைப்பட என்ன இருக்கிறது என்ற கேள்வி எழலாம். இவை சமூகப்பிரச்சனைகளைத் தொட்டு அவற்றை திசை திருப்பி விடுகின்றன. சிந்தனையை தூண்டுவதற்குப் பதிலாக தூண்டாவிட்டாலும் பரவாயில்லை மழுங்கடிக்கும் வேலையை அல்லவா செய்கிறது. தமிழ் சினிமாவிற்குரிய மாயையில் மூழ்கடித்து திருப்தி காணும் மனோநிலைக்கு ரசிகர்களைத் தள்ளிவிடுகின்றன. இத்தகைய பிரச்சனைகள்தான் இவை குறித்து அக்கறை கொள்ள வேண்டிய தேவையை ஏற்படுத்துகிறது.

சரி "வானமே எல்லை" திரைப்படம் எவ்வாறு இந்த வரையறைக்குள் வருகிறது என்பதையும் அவற்றில் வரும் கருத்துக்கள் எவ்வாறானவை என்பதையும் பிரச்சனைக்கு பாலசந்தர் வைக்கும் தீர்வையும் நோக்குவோம்.

வழமையான பாடல்கள், சென்டிமென்ற் காட்சிகளை இங்கு நான் விட்டு விட்டு விடயத்துக்கு நேரே வருகின்றேன். தீபக், பசுபதி, கௌதம் என்ற மூன்று இளைஞர்களையும் கல்பனா,சுபத்திரா என்ற இரு இளைஞிகளையும் பற்றிய கதை இது. ஒவ்வொருவரும் வெவ்வேறு குடும்பச் சூழல்கள், பின்னணிகளில் இருந்து வருகிறார்கள். சட்டத்தையும், நீதியையும் கட்டிக்காக்கும் நீதிபதியின் மகனாக செல்வச் சூழலில் வளர்ந்த தீபக் தனது தந்தை லஞ்சம் லாவனியமற்ற நேர்மையான மனிதன் என்று நம்பி வாழ்கிறான்.அவன் ஆசைப்பட்டவற்றை எல்லாம் நிறைவேற்றுகிறார் தந்தை இத்தனை வசதி வாய்ப்புகளும் எப்படி வந்தது என்ற விதத்தை சுட்டிக்காட்டுகிறான் தீபக்குடைய நண்பன். தீபக் அதை நம்ப மறுக்கிறான்; பின்பு தந்தை லஞ்சம் வாங்குவதை நேரில் காணும் தீபக் அவருடன் முரண்படுகிறான். நீதிமன்றத்திலே சென்று அவரை அம்பலப்படுத்த முயல்கிறான். அவன் செயல் அம்பலமேறுததை கண்டு விரக்தியுறுகிறான். வீட்டுடன் முரண்பட்டு வெளியேறுகிறான். அடுத்தவன் கௌதம் பெரிய முதலாளி ஒருவரின் மகனான இவன் தந்தையின் அலுவலகத்தில் பணிபுரியும் பெண்ணையே காதலிக்கிறான். தந்தை இதை எதிர்க்கிறார். மகன் சவால் விடுகிறான். தந்தை இவர்கள் காதலை முறியடிக்க 'வித்தியாசமாக' வில்லத்தனம் புரிகிறார். காதலியின் விதவை அம்மாவை திருமணம் செய்து கொள்கிறார். இதனால் விரக்தியுற்று மகன் வெளியேறுகிறான்,காதலி சீரழிவுக்கு அடிமையாகிறாள். அடுத்தது பசுபதி. நடுத்தர தமிழ் வாத்தியாரின் மகன். படித்து பட்டம் பெற்ற இவனுக்கு மூன்று வருடங்களாக வேலை கிடைக்கவில்லை. வேலைக்குப் போகும் இடங்களில் சாதியின் பேரைக் கேட்டவுடன் கோபம் கொண்டு கலகம் செய்கிறான். தந்தையின் சிபாரிசில் வரும் வேலைகளும் இதனால் தடைப்படுகின்றன. தந்தை வீட்டை விட்டு வெளியேறும்படி கூறுகிறார். அவனும் வெளியேறுகிறான்.

அடுத்தது கல்பனா. இவளது தந்தை கணக்குப் பிள்ளையாக வேலை பார்க்கும் வயது முதிர்ந்த சேக்(வட்டிக் கடைக்காரர்) இவளைத் திருமணம் செய்து தரும்படி கேட்கிறான். தவிர்க்க முடியாமல் கழுத்தை நீட்டிய கல்பனா இரவோடு இரவாக வீட்டை விட்டு ஓடி விடுகிறாள். ரெயிலில் நான்கு ஆண்களால் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாகும் சுபத்திராவுக்கு இவள் ஆதரவு கொடுக்கிறாள்.

தீபக், கௌதம், பசுபதி, கல்பனா, சுபத்திரா ஆகியோர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நண்பர்களாகி ஒன்றாகிறார்கள். அனைவரும் தங்கள் துன்பக்கதைகளை பகிர்ந்து கொள்கிறார்கள். "கேடு கெட்ட சமூகத்திற்கு சாட்டையடி கொடுக்க நாம் ஒன்றாக தற்கொலை செய்து கொள்வோம்" என்ற முடிவுக்கும் வருகின்றனர். முதலில் இருந்து தற்கொலையை எதிர்க்கும் பசுபதி அவர்கள் தன்னை கோழை என்று கிண்டல் செய்யக் கூடாது என்பதற்காக தானும் தற்கொலைக்கு சம்மதிக்கிறான். தற்கொலைக்கு நாளும் குறித்தாயிற்று. இடையில் அவர்களுக்குள் ஒரு சபலம்,கையில் இருக்கும் காசு தீரும் மட்டும் (அதாவது 100 நாட்கள்) சந்தோசமாக வாழ்ந்து இறப்பது என்று முடிவு செய்கிறார்கள். ஒப்பந்தம் போட்டுக் கொள்கிறார்கள். இந்த 100 நாட்களுக்கிடையில் அவர்கள் எப்படித் தங்களுக்குள் முரண்பட்டுக் கொள்கிறார்கள், எடுத்த முடிவில் இருந்து தளம்புகிறார்கள், பின்பு திருந்துகிறார்கள் என்பதே படக்கதை சுருக்கம்.

சமூகப் பிரச்சனையாக முதலில் கதையை காண்பிக்கத் தொடங்கிய பாலசந்தர் பின்பு அவர்களை சமூகத்தை விட்டு அந்நியப்படுத்தி- நம்மையும் தான்- குளுகுளு மலைப்பகுதிக்கு அழைத்துச் சென்று விடுகிறார். அதன் பின்பு பிரச்சனையெல்லாம் தற்கொலை செய்து கொள்ளலாமா? வேண்டாமா? என்பது தான். தற்கொலை கோழைத்தனமானது. தன்னம்பிக்கையும் முயற்சியும் இருந்தால் போதும், வாழலாம்,சமூகத்தில் எத்தனையோ சீர்திருத்த பணிகள் இருக்கின்றன அவற்றை செய்து கொள்ளலாம் என பாதை காட்டுகிறார். சுருக்கமாக வைரமுத்துவின் வரிகளில் சொன்னால் "சாவை சாவு தீர்மானிக்கட்டும் நாம் வாழ்க்கையை தீர்மானிப்போம்" வாருங்கள் என இளைஞர் சமூகத்தை அழைக்கிறார். இதற்காக உடல் ஊனமுற்ற காந்திராமனை உதாரணம் காட்டுகிறார். சமூகத்தில் நிலவும் ஊழல், லஞ்சம், பசி, ஏழ்மை, ஏற்றத்தாழ்வுகளால் முரண்பட்டு கொதித்து எழும் இளைஞர் சமூகத்திற்கு பாலசந்தர் காட்டும் வழி சீர்திருத்தம். இங்கு ஒரு கேள்வி எழுகிறது. இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் இவ்வாறு உள்ள லட்சோப இலட்சம் இளைய சமூகத்திற்கு பாலசந்தர் காட்டும் வழி தீர்வாகுமா என்பதே அது. சீர்திருத்த, சமூக சேவையில் ஈடுபட எத்தனையோ சமூக சேவை 'அமைப்புக்கள், மத நிறுவனங்கள், தன்னார்வக் குழுக்கள் இருக்க ஆற்றல் நிறைந்த இளைஞர்களை வெறும் சீர்திருத்தப் பாதையில் தள்ளிவிடும் பணியையே பாலசந்தர் செய்கிறார். இத்தகைய சமூகப் பிரச்சனைகளுக்கு காரணமான அரசியல் காரணிகளை திட்டமிட்டே தொட மறுத்திருக்கிறார். தொட்ட பிரச்சனைகளிலும் தப்பு கருத்துக்களை நியாயப்படுத்த முனைகிறார். இதன் மூலம் அவர் எந்தப் பக்கம் என்பதை தெளிவு படுத்தி விடுகிறார். இட ஒதுக்கீடு சம்பந்தமாக பசுபதி மூலம் அவர் சொல்ல விரும்புவது மேல் சாதியிலுள்ள திறமையுள்ள இளைஞர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையே. பசுபதி என்ற பாத்திரம் தந்தையை பார்த்து "பிறந்தது தான் பிறந்தீங்க ஒரு பணக்கார முதலியாராக பிறந்திருக்க கூடாதா?" என்கிறான். பாரதியார் சிலையைப் பார்த்து "நீயும் ஐயர் என்னுட்டு உனக்கும் வேலை கிடைச்சிருக்காது நான் 78 இற்கு மேல் மார்க் வாங்கியும் எனக்கு வேலை கிடைக்கல" என்று புலம்புகிறான். இதன்மூலம் தான் சார்ந்த பிராமணியத்தை நியாயப்படுத்துகிறான். இதில் தனிமனித பிரச்சனையை காட்டி இட ஒதுக்கீட்டில் உள்ள சமூகரீதியான நியாயத்தை மூடி மறைக்கப் பார்க்கிறார். எப்படி இருக்கிறது பாலசந்தரின் சமூகப் பிரக்ஞை.

தீபக் August 15 அன்று (சுதந்திர தினத் தன்று) தேசியக் கொடியேற்ற முற்படுகிறான். அதைப் பார்த்து கௌதமும், சுபத்திராவும் கிண்டல் செய்கின்றனர். "தனக்கு இதில் எல்லாம் நம்பிக்கை இல்லை என்கிறான்" கௌதம். சுபத்திராவும் தானும் கௌதம் கட்சி என்கிறாள். தனக்கு நடந்த அநியாயத்தை கூறுகிறாள். "வக்கிர புத்தி படைத்த அப்பனுக்கு மகனாகப் பிறந்ததுதான் நீ செய்த தவறு அதற்காக இப்படி பொதுப்படையாக இழிவுபடுத்தக் கூடாது" என்கிறான் தீபக். "44 ஆண்டுகளாக இந்தியன் என்ற உணர்வை நமது மனங்களில் வளர்க்க தவறியது தான் தப்பு" என்கிறான். அவர்களும் மனம் திருந்துகின்றனர். பொதுப்படையாக இழிவு படுத்தக் கூடாது என்கிற பாலசந்தர் இந்திய ஒருமைப்பாட்டு உணர்வு இல்லாமைக்கு பொதுவான அரசியல் காரணங்களை கண்டு கொள்ளாமல் இந்தியன் என்ற உணர்வு பற்றி பொதுவாகவே பேசுகிறார். பஞ்சாப், அசாம், காஷ்மீர் போன்ற மாநிலங்களில் நடக்கும் பிரச்சனைகள் பாலசந்தர் கண்களுக்கு தெரியாமல் விட்டதில் வியப்பில்லை. தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தைப் பற்றி எதுவும் சொல்லாமல் போராளிகளின் தவறுகளை மட்டும் காட்டி கொச்சைப்படுத்தியவர்தான் - புன்னகை மன்னன் - பாலசந்தர். ஏற்கனவே இருந்து வரும் இமேஜை காக்கவும், பணத்தை சேர்க்கவும் எந்தப் பிரச்சனையையும் தன் இலட்சத்திற்கு இழுப்பார் பாலசந்தர். அது இந்தப் படத்திலும் நிரூபணமாகி இருக்கிறது.

• ராகவன்

www.tamilarangam.net

# நிறவெறி வெளிச்சத்தில் அமெரிக்கா

உலகின் முன்னணியில் நிற்கும் மிகப் பெரிய முதலாளித்துவ நாடான அமெரிக்காவின் நிறவெறிக்கு எதிராக கறுப்பினமக்கள் மே மாதம் 3ம்,4ம் திகதிகளில் போர்க்கோலம் கொண்டார்கள. Los Angels நகரில் இடம்பெற்ற இக்கலவரம் பெரும் அழிவுகளையும் பாதிப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது. திடீரென வெடித்த ஒன்றுபோல் தோன்றினாலும் இக்கலவரம் கறுப்பின மக்களின் உள்ளக்குமுறலின் வெளி ப்பாடேயாகும்.

அமெரிக்காவின் இரண்டாவது தலைநகரமான Los Angels இல் மார்ச் 3ம் திகதி இரவு Rotneyking என்ற 26 வயதுடைய கறுப்பின இளைஞனை பொலிசார் மிருகத்தனமாக தாக்கினர். Rotneyking ஐ தாக்கிய நான்கு பொலிசாரும் வெள்ளை இனத்தவர்கள். காரை வேகமாக ஓட்டிச் சென்றதே அந்த இளைஞன் செய்த குற்றமென பொலிசார் தெரிவித்திருந்தனர். அந்த இளைஞனை கதறக்கதற கோரமாக அடித்து நொருக்கினர். சிலநிமிடம் நீடித்த இந்த பயங்கரத்தை தற்செயலாக ஒருவர் வீடியோ மூலம் படம் எடுத்திருந்தார். இச்சம்பவம் சம்பந்தப்பட்ட வீடியோ தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டபோது பரபரப்பு ஏற்பட்டது.

ஏப்பிரல் 29ம் திகதி இவ்வழக்கு 12 வெள்ளை யூரிகளின் தலைமையில் நடைபெற்றது. ஆனால் தீர்ப்பு ( வெள்ளை இன ) பொலிசாருக்கு சாதகமாகவே அமைந்தது. தம்மை தாக்க முற்பட்டதாலேயே தாம் Rotneyking ஐ திருப்பித் தாக்கியதாக பொலிசார் கூறியதை நீதிமன்றம் அங்கீகரித்தது. அந்த நான்கு பொலிசாருக்கும் சாதகமாக 12 யூரிகளும் தீர்ப்பளித்தனர். இதனால் கொதிப்படைந்த கறுப்பின மக்கள் Los Angels நகரமே தீப்பற்றி எரியுமளவுக்கு கலவரத்தில் ஈடுபட்டனர். இந்தக் கலவரம் Califrnia, Hollywood, Laswagas, San Francisco என எல்லா நகரங்களுக்கும் பரவியது. கனடா, லண்டன், போன்ற நாடுகளில் வாழும் கறுப்பின மக்களும் அந்நாடுகளில் இருக்கும் தூதராலயத்திற்கு முன் கலவரத்தில் ஈடுபட்டார்கள்.

Los Angels இல் தாக்குதல் மூன்று, நான்கு நாட்கள் நீடித்தன. இதில் 12,000 பேரளவில் கைது செய்யப்பட்டனர். அவசர காலச்சட்டமும், ஊரடங்கும் பிறப்பித்து, போருக்கு செல்வதுபோல் சொந்த நாட்டு மக்களை அடக்க டாங்கிகள் சகிதம் இராணுவம் Los Angels க்கு அணிவகுத்தன. நான்கு நாட்களாக நீடித்த இக்கலவரம் சிறிது, சிறிதாக தணிந்தது. SanFrancisco நகரமும் கலவரத்தில் எரிந்தது. இச்சம்பவம் பற்றி ஒரு பத்திரிகை நிருபர் தனது செய்தியில் "San Francisco வைப் பார்க்கும்போது யூகோசிலாவியா மாதிரி இருந்தது எனவும் Los Angels 1964ம் ஆண்டு இருந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என்றும் கூறியு ள்ளார். California விலும் வங்கிகள், இன்சுரன் கம்பனிகள், விளம்பரத்தாபனங்கள், போன்ற பல நிறுவனங்கள் எரிக்கப்பட்டு நகரம் உருக்குலைந்து காணப்பட்டது.

உலகில் கறுப்பினத்தவர்கள் நிறவெறியால் ஒடுக்கப்பட்டு வருகிறார்கள். (அமெரிக்காவிலும் தான்) அமெரிக்காவில் கறுப்பின மக்களில் பலர் வறுமையில் வாழவிடப்படுகிறார்கள். சேரிப்புறங்களில் மட்டுமல்ல, நகரப்புறங்களில் "ரெலிபோன் பூத்" கள் கூட அவர்களுக்கு படுத்துறங்கும் இடமாக கைகொடுக்கின்றன. பாடசாலைப் பருவத்திலேயே சிறு சிறு தவறுகளுக்காக சிறைகளில் தள்ளப்படுவது சாதாரணமாகவே நடக்கிறது. கறுப்பினத்தவர்களில் நான்குபேருக்கு ஒருவர் என்ற வீதத்தில் சிறைகளில் இருப்பதாக சமீபத்திய புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இந்நிலைமைகள் பலரை கிரிமினல் குற்றங்களை செய்யுமளவுக்கு தள்ளி விடுகிறது. அமெரிக்காவில் வசித்துவரும் ஆசியர்களுக்கு வழங்கும் சலுகையும், வசதியும் கூட கறுப்பின மக்களுக்கு மறுக்கப்படுகிறது. இப்படி வெறுப்பும், ஆத்திரமும் புகைந்து கொண்டிருக்கும் நேரத்தில் Rotneyking இன் விவகாரம் கறுப்பின மக்களை மேலும் ஆத்திரமூட்டவைத்தது.

தனது நிறவெறியை மூடிமறைத்து ஜனநாயக வேடம்போட்டு ஆடிவந்த அமெரிக்காவின் நாடகம் திரைகிழிந்தது. இதற்குப் பின்னும் "The Great Americans " இன் ஒழுக்கம், கட்டுப்பாடு, ஜனநாயகப்பண்பு என்பது பற்றியெல்லாம் George Bush தொலைக்காட்சியில் விளாசிக்கொண்டிருந்தார். ஆனால் அமெரிக்காவோ நிறவெறியில் நீறு பூத்துப் போயிருக்கிறது.

* தீபா *



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## என்னுடைய பார்வையில்

# வீட்டின் மூலையில் ஒரு சமையலறை

இன்று வெளிவரும் பத்திரிகைகள் ஏராளம். ஆனால் பெண் எழுத்தாளர்களின் எண்ணிக்கையை பொறுத்த வரை சொற்பமே. அத்தகைய சில பெண் எழுத்தாளர்களின் வரிசையில் பெண்களின் உரிமைக்காக பெண்விடுதலைக்காக எழுத்தின் மூலம் சிறப்பாக போராடும் அம்பை எல்லோராலும் அறியப்படுபவர். இவரின் ஒவ்வொரு வரியிலும் பெண்களின் விடுதலை,பெண்களின் உரிமைக்குரல் ஓங்கி நிற்பது இவரது கதைகளை படித்தவர்களுக்கு தெரிந்து இருக்கும். இத்தகைய சிறப்புடைய இவ் எழுத்தாளரின் "வீட்டின் மூலையில் ஓர் சமையலறை" எனும் சிறுகதைத் தொகுப்பில் இருந்து வீட்டின் மூலையில் ஓர் சமையலறை எனும் சிறுகதை பற்றிய எனது கருத்தை உங்கள் முன் வைக்கின்றேன்.

வட இந்தியாவில் உள்ள ஓர் கூட்டுக் குடும்பத்தில் சாதாரணமாக நடைமுறையில் வரும் சிக்கல்களை கொண்டதே இச் சிறுகதையின் மூலமாகும். கூட்டுக் குடும்பம் எனும் போது அதிகம் பாதிக்கப்படுபவள் பெண்ணே. அவள் அனுபவிக்கும் வேதனைகளை கொண்டதே இச்சிறுகதை.

பெண் என்றால் அவளின் தொழில் சமையல்,அவளின் இருப்பிடம் சமையலறை என்பது எம்மவர் பலரின் அபிப்பிராயம். அவளுக்கு அழகுணர்ச்சியோ, இயற்கையை ரசிக்கும் குணாம்சமோ இருக்கக் கூடாது இருக்க முடியாது. அவளின் தொழில், குணாம்சம் எல்லாம் சாப்பாடு சாப்பாடு சாப்பாடு என்பதுதான் என பலர் எண்ணலாம். இக்கதையின் பெரியவரின் எண்ணமும் அதுவே.

மேலும் வீட்டின் ஏனைய பகுதிகளை சீராக திட்டமிட்டு கட்டும் பெரியவர் வீட்டின் சமையலறையை மட்டும் கவனிக்காது சீரமைக்காது விடுகிறார். காரணம் எமக்கும் புரியாமல் இல்லை. சமையலறை பெண்ணின் இருப்பிடமே ஒழிய ஆண்கள் நிழலுக்காக ஒதுங்கும் இடம் கூட இல்லை. ஆண்கள் சமையல் அறையினுள் பிரவேசித்தால் அவனை ஓர் மட்டமான பார்வையிலேயே பார்க்கப்படும். பெண்களை இதிலிருந்து எவ்வளவு கேவலமாக நடத்துகிறார்கள் என நாம் புரிந்து கொள்ளலாம். இக்கதையில் முற்போக்கு எண்ணம் கொண்ட ஓர் பாத்திரமாக பெரியவரின் ஒரு மகன் கிசன் எனும் பாத்திரம் படைக்கப்பட்டு உள்ளது. ஆசிரியரின் கருத்துக்களை வெளிக் கொணரும் பாத்திரமாக கிசனின் மனைவி மீனாட்சி எனும் பாத்திரம் அமைகிறது.

அந்த குடித்தனத்தின் சமையலறை எவ்வளவு மோசமான நிலையில் உள்ளது என்பதை "சமையலறையில் அடி வைத்து, முதல் நாள் சமைத்து, கைக்கு தங்க வளையல் போட்ட உடனேயே வெடிப்புக்கு தடவ ஒரு மெழுகுக் களிம்பு தந்து விடுவாள் ஜீஜி" என்று தெளிவாக ஆசிரியர் எடுத்துக் காட்டுகின்றார். பெண்களின் யோசனைகள், எண்ணங்கள் பொதுவாக நிறைவேற்றப் படுவதில்லை. பெண்களுக்கு அடுப்படியை விட்டால் வேறு என்ன தெரியும்? அவர்களுக்கு தெரிந்தாலும் அதை நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பது பொதுவாக எல்லா ஆண்களிடமும் உள்ள கருத்தாகும். இக்கதையில் வரும் பெரியவரும் தான் ஓர் ஆண் என்பதை நிலை நாட்டும் முறையை ஆசிரியர் அழகாக எடுத்துரைக்கின்றார். அந்த பெரியவர் வீட்டின் சமையலறை மோசமான நிலையில் இருந்த போதும் அதைக் கவனிக்காது கார் "செட்"டின் மேல் ஒரு அறை கட்டுகிறார். அதைக் கேட்க அந்த வீட்டில் ஒருவருக்கும் துணிவு இல்லை. ஆனால மீனாட்சி துணிந்து அதை பெரியவரிடம் கேட்கிறாள் "பப்பாஜி, சமையல் அறைக்கு வெளியே உள்ள தாழ்வாரத்தைப் பெரிது பண்ணி விடுங்களேன். அதை நீங்கள் அகலமாக்கினால் நாற்காலி போட்டு உட்காரலாம். இடது பக்கம் ஒரு பாத்ரூம் கட்டினால் அதில் பெரிய தொட்டி போடலாம், பாத்திரம் தேய்க்க. பாத்ரூமுக்கு வெளியே துணி உலர்த்த அலுமினியக் கம்பி போட்டு விடலாம்"





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பப்பாஜியை ஏன்? அங்கு உள்ள மற்றய பெண்களையும் இவ் அபிப்பிராயம் தாக்குகின்றது. ஏன் எனில் அவர்கள் இதுவரை இப்படி ஓர் அபிப்பிராயம் சொன்னது கிடையாது. பப்பாஜி எதற்காக? எனக் கேட்கின்றார். "இந்த சமையலறைத் தொட்டி ரொம்ப சின்னது. தண்ணி வேறு சரியாகப் போவதில்லை. வேலைக்காரி அங்கேயே பாத்திரம் தேய்த்தால் சமையலறை முழுவதும் தண்ணீர். நிற்க முடியவில்லை. ஜன்னலுக்கு வெளியில் துணி தொங்கினால் மலையை மறைக்கிறது பப்பாஜி" என்கிறாள் மீனாட்சி. கிசனும் அதற்கு உடன்படுகின்றான். இது பப்பாஜிக்கு பெரிய அடியாக உள்ளது. உடனே மகனைப் பார்த்து "நீ எங்கே சமையலறைப் பக்கம் போனாய்? என வினாவுகிறார். "அவள் மைசூர் சமையல் செய்யும் போது இவன் தான் மிளகாய், வெங்காயம் அரிந்தான்." என்றாள் ஜீஜி.(கிசனின் தாயார்) "பேசாமல் உனக்கே தங்க வளையல் போடலாம் போலிருக்கிறதே" என்கிறார் பெரியவர்.

இதிலிருந்து சமையல் என்பது பெண்களுக்கு மட்டுமே உரிய தொழில் என பலர் எண்ணுவது வெளிப்படுகிறது. ஆனால் அறை கட்டி முடித்தாகி விட்டது. சமையலறை நிலவரம் மாற்றப்படவில்லை. மாறாக மேலும் இரண்டு நைலோன் கயிறுகள் கட்டப்படுகின்றது. இது ஆண் என்பதன் சவால். சமையல் பண்பாட்டுக்கு மலை எதற்கு? அதன் பச்சை எதற்கு? உனக்கு அழகுணர்ச்சி,இயற்கையை ரசிக்கும் குணாம் சம் தான் எதற்கு? சமை பெண்ணே சமை, சமையல் உனக்கு போதும் என்பதே ஆண் இனத்தின் பொதுவான கருத்து. மேலும் உணவு விடயத்தில் கணவனை இழந்த ஒரு பெண் மிகவும் வஞ்சிக்கப்படுகிறாள். அவளுக்கு குங்குமம் மட்டுமல்ல வெற்றிலை, மது,மாமிசம் மற்றும் ஏனைய விசேட உணவுகளும் தருவது இந்தியாவில் ஒரு சில சமுதாயத்தில் மறுக்கப்படுகின்றது. காரணம் அவளுக்கு பாலியல் ரீதியான உணர்ச்சிகள் எதுவுமே தோன்றக் கூடாது என்பதே. இந்தக் கொடுமை ஏன்? இதுவும் ஆண் இனம் பெண்கள் மீது நடத்தும் ஓர் ஒடுக்குமுறையே

மேலும் பெண்களுக்கு சமையல் அறையை ராஜ்யமாக ஒதுக்கி அதையே அவர்கள் உலகமாக எண்ணும்படி செய்துவிடுகின்றனர் மற்றய விடயங்களில் பெண்களை ஒடுக்குவதை பெண்களே உணர்ந்து கொள்ளாமல் இருப்பது மிகவும் கவலைக்குரியது. எமது பெண்களிடம் நகை, புடைவை, சமையல், சாப்பாடு இவையே உலகமாக போய்விட்டது. இதையே ஆணினமும் தனக்கு சாதகமாக பயன்படுத்துகின்றது. இதை ஆசிரியர் மிகவும் திறம்பட விளக்குகின்றார். அதுமட்டுமல்ல குழந்தைப் பருவத்தில் இருந்தே பெண் ஆனவள் சமையலுக்கு என்றும், ஆண்கள் படித்து பட்டம் பெற்று உத்தியோகம் பார்க்கவென்டும் எமது சமுதாயத்தில் ஒரு கருத்து நிலவுகின்றது. இக்கருத்து தற்போது பெரிதளவில் மாற்றமடைந்து விட்டாலும் முற்றாக மறைந்து விட்டது என்று நாம் சொல்ல முடியாது. ஏன் ஐரோப்பாவிற்கு வந்தும் கூட பலர் பெண்கள் வேலைக்குப் போவதை விரும்புவதில்லை. இதன் அடிப்படை மேற்கூறிய கருத்திலிருந்தே உருவானது. இக்கருத்தையும் ஆசிரியர் தனது கதையில் தரத் தவறவில்லை. மொழி படித்து பட்டம் பெற்று வேலை பார்க்கும் பெண்களை ஒரு பூரணமான மருமகளாக ஏற்றுக் கொள்வதில்லை. பூ அலங்கார வகுப்புக்கள், பேக்கரி வகுப்புக்கள், தையல் வகுப்புக்கள் இவற்றுக்கு சென்று பயின்ற பெண்ணையே பூரணமான மருமகள் என ஏற்றுக் கொள்கின்றனர்.

பெண் என்பவள் திருமணமாகி கணவன் வீட்டுக்கு செல்லும் போது அவளின் தாயாரே அவளுக்கு சொல்வதெல்லாம் (சமையல் தான் முக்கியம் அதை உனது கையில் எடுத்துக் கொள்,அவர் விரும்பியபடி உன்னை மாற்றிக் கொள்) இதுகளைதான். ஆனால் ஒரு ஆணுக்கு இவையெல்லாம் போதிக்கப்படுவதில்லை. இதையும் ஆசிரியர் தனது மாமியார் கதாப் பாத்திரம் மூலம் தெளிவாக எடுத்துரைக்கின்றார். அவளின் தாயார் அவள் திருமணமாகி கணவன் வீடு சென்ற போது சொன்னது "சமையலறையை ஆக்கிரமித்துக் கொள், அலங்காரம் செய்துகொள்ள மறக்காதே..... இரண்டும் தான் உன் பலம். அதிலிருந்து தான் அதிகாரம். பெண்ணே பெண்ணுக்கு கொடுக்கும் உபதேசம். இல்லாவிட்டால் அவளை கணவன் வீட்டார் உனது தாயார் வளர்த்த வளர்ப்பு என்று தான் பேசுவார்கள். தந்தையின் பங்கு இதில் என்ன? அவர் ஓர் தலைவன். அதுமட்டும் தான். மிகுதி வீட்டு வேலை, குழந்தை வளர்ப்பு எல்லாம் பெண்கள் மீது தான். இதில் ஆண்கள் பங்கேற்க விரும்புவதில்லை. ஆனால் பெண் என்பவளுக்கு பலமே ஆண்தான் என எமது சமுதாயம் நினைக்கிறது. அதுமட்டுமல்ல நகைகள், சமையலறை இவை தான் பலம் என பெண்களே எண்ணுகிறார்கள். இவற்றினின்று விடுபடும் போதே பெண்ணின் பலம் உருவாகின்றது.

இச்சிறுகதையில் உள்ள சம்பவங்கள் யாவும் தற்போதும் நடைமுறையில் உள்ளவற்றையே படம் பிடித்துக் காட்டுகிறது. இச்சிறு கதை இலகுவான நடையில் எழுதப்பட்டிருந்தால் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும்.

• இந்து

*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நட்சத்திரங்களே வருக !!

எம் தேசத்தின்
இடிபாடுகளில் இடறி
தடுமாறி
வந்து சேர்ந்தோம்.

பசியோடு வாழ்வது எப்படி ?
செல்லடிக்கு தப்புவது எப்படி ?
ஊமையாய் வாழ்வது எப்படி ?
என
கற்றுக் கொண்ட ஒரு தேசத்தின்
**அகதிகளாய்** ஆனோம்.

இப்போ
உங்களுக்கு நாம்
**ரசிகர்களாக**
அறிமுகமானோம்.

பலவீனமே மூலதனமாய்
ரசனையாய்ப் போன
உங்கள் " கலை வளர்ப்பில் "
எங்கள் அவலத்தின்
ஒரு துளி - - - ?
ஒரேயொரு துளி ??
முடியுமா உங்களால் ?

யதார்த்தத்தின்
குருடர்களாய்ப் போன நீங்கள்
உங்களை நீங்களே
கலைஞர்கள் என
பெயர்சூட்டிக் கொண்டீர்கள்.

மொழியால்
இனத்தால்
நாம் ஒன்றானோம் !

தென் ஆபிரிக்க அவலத்தில்
விம்மின சில
ஆபிரிக்க நாட்டு சினிமாக்கள்.
நிக்கரக்குவாவின்
வீரம் செறிந்த போராட்டத்தில்
பொருமி வெடித்தன சில
மத்திய அமெரிக்கநாட்டு சினிமாக்கள்.

**நீங்களோ** - - -
சினிமாக் கலையின் வலிமையில்
கவர்ச்சியைப் பூ சினீர்கள்
கனவுலக தொழிற்சாலையாய்க்
கட்டி எழுப்பினீர்கள்.

பாசிசத்தின் முகத்தில்
தன் நகைச்சுவையால்
உமிழ்ந்த
சார்லி சப்ளினையும்,
ஜமெய்க்கா மக்களின்
கிளர்ச்சி மனோபாவத்தின்
குழந்தையாய்
பொப்மாலியையும்
கலையுலகம் தான் தந்தது.

**வெட்கப்படுகிறோம் நாம் !**

உலகின் கண்களிலே
கண்ணீராய்
எமது தேச அவலங்களைத்தானும்
அனுப்பிவைக்காத நீங்கள்
எம்மிடம்
**எந்த முகத்துடன் வருகிறீர்கள் ?**

*ஓ - - - -*
*சும்மா கத்தினேன்*
*அவ்வளவு தான் !*

www.tamilarangam.net

**நீங்கள் வாருங்கள் !**

கனவு கலைந்து
எழுந்தபோது
நிஜத்திலேயே என் காதலியைப்
பார்த்த மகிழ்ச்சி
நீங்கள்
திரை கலைந்து
நேரில் வருகிறீர்களாம்.

**வாருங்கள் !**

கமராவோடு நாங்களும்
கமராக்கு முன்னே
நாங்களும் நீங்களுமாய்
முகம் பிளந்த சிரிப்பில்
நிற்போம்.
முடிந்தால்
ஒரு பவுண் சங்கிலியை
பவுண் வளையலை
சூட்ட
எங்களில் சிலர் வருவார்கள்
ஏற்றுக்கொள்ளுங்கள் !

சொர்க்கபுரி சுவிற்சர்லாந்திலும்
ஒரு " புரோக்கிராம் "
என
பேட்டிகளில்
அழகாக பூ சிவிடுங்கள்.

ஐரோப்பிய வாடையோடு
உங்கள்
சொகுசு உலகுக்கு
நேராகவே
போவதும் வருவதுமாய்
நீங்கள் !

**நாமோ --**
இரத்த வாடை மிதந்துவரும்
செய்திகளில்
அழும் எங்கள் மனங்களும்,
எங்களுக்காய் காத்திருக்கும்
கோப்பைகளுடன்
ஆலை இயந்திரங்களுடன்
"போராடும்" கரங்களுமாய்
அகதிகளாவோம் !

எம்மைத் துரத்தும்
நிறவெறித் தீயில்
எத்தனையோ அகதிமுகாம்களை
சாம்பலாய்க் கண்டோம்.
உயிர்களையும் கூடத்தான் !

**அறிவீர்களா நீங்கள் ?**

ஓ----
சும்மா கத்தினேன்
நீங்கள் வாருங்கள் !
" ரசிகர்கள்
ரொம்ப இது பண்ணினாங்க "
என
பேட்டியில் அசத்திவிடுங்கள்.

உண்டியலை எண்ணி முடிய
மீண்டும்
உங்களுக்கு அழைப்பு விடுவோம்
தனியாகவோ
அமைப்பாகவோ !

வாருங்கள்
**ரசிகர்கள்** நாம்
காத்திருக்கிறோம் !!

**ஈ. பாலமோகன்**

www.tamilarangam.net

# ஈழத்திலிருந்து ஓர் பிரசுரம் :

## கொலைவெறி பிடித்த பாசிசக் கரங்களுக்குள் மக்களை நேசித்த இன்னுமோர் மனிதன் !!

ஆம் !
பொறியியலாளர் சேந்தன் புலிகளால் கைது !
யார் இவர் ?
வீண் ஆடம்பரங்களை கொண்டு தம்மை அறிமுகம் செய்யும் அற்பமான மனிதர்கள் வாழும் இந்த உலகில் எந்தவித வீணான ஆடம்பரங்களுமின்றி அடக்கமாக வாழ்ந்த ஓர் அற்புதப்பிறவி !

மனித நேயமே மலடாகிப்போன எமது மண்ணில் மக்களை மனதார நேசித்த ஓர் மனித ஜீவன்

மண்மீட்பு மண்மீட்பு என்ற பேரில் மறைந்து போன காட்டுமிராண்டித்தனங்களை யெல்லாம் மீட்டெடுத்து மக்களை அழிக்கும் அரசியல் நிலவுகின்ற எமது மண்ணை உண்மையாக நேசித்த ஓர் உன்னதப்பிறவி.

விடுதலை, போராட்டம் என்ற பேரில் கோடி கோடியாக மக்களிடம் கொள்ளையிட்டு தாம்மட்டுமே சுகபோக வாழ்க்கையை அனுபவித்தபடி மக்களுக்கு கொலையையும், சித்திரவதைகளையும் மட்டுமே வழங்கும் வெறியர்கள் வாழும் மண்ணில், தனது உழைப்பு முழுவதையுமே தன் சகஊழியர்களுடன் சமனாக பங்கிட்டு தானும் ஒரு சாதரண தொழிலாளியாகவே வாழ்க்கை நடத்திய ஓர் அதிசய மனிதன்.

ஆம் ! மொத்தத்தில் இவர் ஓர் உண்மை மனிதன்.

தமிழ் மண்ணில் குறிப்பாக வடக்கில் சீவல் தொழில் மூலம் கள்ளு இறக்குவதையே தம் ஒரே வருமானமாகக் கொண்ட பல்லாயிரக்கணக்கான குடும்பங்களின் நல்வாழ்விற்கு ஓர் மறைமுக ஆதாரசக்தியாக திரு.சேந்தன் அவர்கள் விளங்கினார் என்பது பலரும் அறியாத உண்மையாகும்.

எப்போதுமே வேற்றுநாட்டு தொழில்நுட்ப இயந்திரங்களை உபயோகிக்க பழகிப்போன எமது மக்களுக்கு தனது சொந்த அறிவையும் திறமையையும் பயன்படுத்தி எமது மண்ணின் மூலவளத்தையே பொன்னாக்கும் தொழில் நுட்பத்தை அறிமுகம் செய்தவர் திரு சேந்தன். திக்கம், வரணி, புதுக்குடியிருப்பு போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ள உள்ளூர் பனஞ்சாராய வடிசாலை இயந்திரங்கள் இவரின் சொந்த வடிவமைப்புக்களே. அவை இன்றுவரை வெற்றிகரமாக இயங்குவதற்கும் இன்னுமபல இயந்திரங்களை வடிவமைப்பதற்கும் ஓய்வு ஒழிச்சலின்றி தன் சகஊழியர்களுடன் கடுமையாக உழைத்தவர் திரு.சேந்தன்.

இந்த வடிசாலைகளை வெற்றிகரமாக தாங்களே நடத்துவதாக காட்டிக்கொள்ளும் புலிகள் இதிலிருந்து மட்டும் வருடத்திற்கு இருபது கோடி ரூபாக்களை இலாபமாக கொள்ளையிட்டு செய்கின்றனர் என்பது பலரும் அறியாத மிகக்கசப்பான உண்மையாகும்.

ஈரான், பிரான்சு, கனடா, இந்தியா போன்ற பல நாடுகளில் வேலைசெய்தபின்னர் தனது சொந்த மண்ணில் செயல்படுவதே சரியானது என்ற இதயசுத்தியோடு நாடுதிரும்பிய இவர் யாழ்பாணத்தில் Sky Lark என்னும் பொறியற்சாலையை ஆரம்பித்து
செயற்பட்டார். தற்போது அது Eziroville என்னும் பெயரில் இயங்கிவருகிறது.

எப்போதும் எம் சொந்த மண்ணின் மூலவளங்கலை வைத்தே தனது திட்டங்களை சிந்திக்கும் இவர் தன்னோடு தொழில் செய்த அனைவரையும்கூட அப்படிச் சிந்திப்பதற்குப் பழக்கினார்.

**ஆனால் இன்று புலிகளின் பட்டியலில் சேந்தன் ஒரு துரோகி !**

எந்தவொரு கட்டத்திலும் தனது தனித்துவத்தையும் மனிதமாண்பையும் இழந்துவிடாது கம்பீரத்துடன் சரியை சரியெனவும் தவறை தவறெனவும் நேருக்குநேர் சுட்டிக்காட்டிய நேர்மையுள்ள மனிதரான இவரை இக்கொடியவர்கள் சந்தேகித்தது ஏன் ?


→ 39 ம் பக்கம்



# ஒரு பெண்ணின் குரலாக……

மக்களின் உதடுகள்
மறுபடி திறக்க .
உழைக்கும் மனிதமே !

சனத்தொகையின்
சரிபாதியில் ஒருத்தி
தன் உதடுகளைத் திறந்தும்
சமூகம் தன் செவிகளை
இறக முடியாது ஏன் ?- - -

ஒரு பெண்ணின் குரலாகவே
பிறப்பெடுக்கிறேன்
பதிலென்ன மனிதமே !

அவள்
வறுமைச் செடியிலே பூ த்த
ஒரு கிராமத்துப் பூ

பிறந்த குழந்தைக்கு
அப்பாவின் நினைவாக
அவள் சூட்டிய பெயர்
“ குமாரி ”

அந்தப் பிஞ்சுக் குழந்தையின்
அப்பாவைத் தேடித் தருவோம்
நம்புங்கள் என்றவர்கள்
சமாதானப் புறாக்களல்ல
பிருகப் போர்வையை
கழற்ற விரும்பாத கழுகுகள்.

எட்டு வருடங்களாக
அந்த நம்பிக்கையின் நிழல்களிலே
இளைப்பாற முனைந்து
தோற்றுப்போன அவளுக்கு
சமூகம் கொடுத்தது
“ கெட்டுப்போன பெண்ணே !
நீ பட்டுப்போன மரம் ” என்ற

இங்கே
கோலங்களாக்கப்பட்டவை
கோடுகளல்ல
சில கிறுக்கல்களே.

மனிதமே !
நீயும் மௌனித்து விடாதே
அவள்
கண்ணீருக்கு
நிவாரணம் தேடு.
இன்றுவரை
விடியாத இரவுகளில் நின்று
ஒரு விடிவு கிட்டாதா என்று
ஏங்குபவளுக்கு
முடிவு கூறு.

ஒரு காமப் பார்வையின்
கபளீகரத்தால்
விழுங்கப்பட்டவளுக்கு



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நேசிப்பதற்காக நெருங்காமல்
நெருங்குவதற்காகவே நேசித்த
ஒரு காமத்து வண்டு

பூ மடல் மறைவிலே
மஞ்சள்க் குளித்து
விருந்தெடுத்த வண்டு
தெவிட்டிய பின்
தொலைதூரம் பறந்தது.

கடலுக்கு
மறைப்புப் போட முடியுமா ?
கர்ப்பத்தை மூடி
மாராப்புப் போட முடியுமா ?

இழிசொல்லை மட்டுமே
அவள் கனவனையல்ல.

அகதி முக்காடனிந்து
ஜேர்மனிக்குள் நுழைந்த
அந்தக் கருப்பு வண்டு
ஒரு ஜேர்மானியப் பூ வோடு
கைகோர்த்து
சபைக்கு வருகிறது.

சபைகளே இங்கு
மௌனித்திருக்கிறது
அது வித்துவ நிலத்திலே
விளைந்த பயிர் என்பதால்

என்ன தீர்ப்பு
பதிலென்ன மனிதமே !---

அவள் மட்டும்
எப்போதும்
பூ வாக இருப்பாளா ?
இல்லை---இல்லை---
என்றோ ஒருநாள்
புயலாக எதிர்ப்பாள்.
அப்போது
அந்தப் புயலுக்காவது
நீ நியாயம் கூறுவாய்.
அந்த நம்பிக்கையில்
அவளோடு நாமும் -------.

● அல்வை - என். கவின்

## 21ம் நூற்றாண்டில் மனிதகுல முன்னேற்றம்

தென்ஆபிரிக்காவில் ஆயிரக்கணக்கான மொசாம்பிக் நாட்டு அகதிகள் அடிமைகளாய் விற்கப்படுகின்றனர். உள்நாட்டு யுத்தத்தில் இருந்தும் கொடூரமான பட்டினிச்சாவில் இருந்தும் தப்பித்து உயிர்வாழ தென்னாபிரிக் காவுக்கு வந்த அகதிகள், கையில் விலங்கிடப்படாத புதிய அடிமைகளாய் வெள்ளைநிற வெறியர்களால் வாங்கப்படுகின்றனர். அடிமைகளில் ஆண்கள் தோட்டங்களிலும் தொழிற்சாலைகளிலும் ஊதியமில்லாமல் வேலை செய்யவேண்டும். பெண்கள் காமலீலைகளுக்கான அடிமைகளாய் (Sex- Sklaven) விபச்சாரிகள் நிறைந்த Pretoria, Johannesburg நகரங்களில் விற்கப்படுகின்றனர்.

## பகற்கொள்ளை

இன்றைய உலகின் சமாதானத் தூதுவன் ஐ. நா. ஈராக் - குவைத் யுத்தம் முடிந்து 16மாதங்களின் பிற்பாடு இரு நாடுகளிற்குமான புதிய எல்லை வரையறுப்புக்களை செய்கிறார். எப்படித்தெரியுமா? ஈராக்கிற்கு சொந்தமான பத்து எண்ணை வயல்கள் நிறைந்தபகுதியை இன்று குவைத்துக்கு சொந்தமாக்கியதோடு புதிய எல்லையை ஈராக் ஏற்கவேண்டும் என்றும் நிர்ப்பந்திக்கிறது. நீங்களே சொல்லுங்கள் இதை எப்படி அழைக்கலாம் ?

www.tamilarangam.net

www.tamilarangam.net

சுவிஸ் :

# கோடைகால உதைபந்தாட்டப் போட்டிகள்

சுவிசில் பல பாகங்களிலும் போட்டிக்கிண்ணங்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் பல குழுக்களாலும் நடாத்தப்பட்டு வருவது உடலுக்கு உகந்ததும் மனதுக்கு ஆரோக்கியமானதுமான நல்ல நிகழ்ச்சிகளே!

Bern இல் றோயல் விளையாட்டுக்கழகம் 2வது தடவையாக இவ்வருடம் 92 ம் ஆண்டுக்கான றோயல் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியினை 30.5.92 இல் Wank dorf இல் அமைந்துள்ள மைதானத்தில் காலை முதல் மாலை வரை நடத்தியது. 16 கழகங்கள் இப்போட்டியில் பங்குபற்றி தாம் சென்ற காலங்களின் ஓய்வு நேரங்களை நல்ல முறையில் உடற்பயிற்சிகளில் செலவிட்டிருப்பதை நிரூபித்துக்காட்டின.

போட்டிகளின்போது ஏற்படுகின்ற ஒற்றுமையீனம்,சச்சரவுகளையும் சமாளித்து கழகங்கள் கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டது பாராட்டப் படவேண்டியதே.

சாதாரண நிகழ்ச்சிகளுக்கே அரசியல் பிரமுகர்,செல்வாக்குள்ளவர்கள் என அலையும் இக்காலத்திலும் விளையாட்டுத்துறையிலே உள்ள ஒருவரையே இனங்கண்டு திரு.கணேச ( கோர்ன் கூர்சு எனும் **சுவிஸ் தேசிய விளையாட்டு ஒன்றில் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டவர்** ) பிரதம விருந்தினராகக் கொண்டது பாராட்டப் படவேண்டியது.

பரிசளிப்புகளின் நோக்கம் சிறந்த வீரர்களை ஊக்குவிப்பதுதான் என்றாலும் கடந்த காலத்தில் நடந்த மரதன் ஓட்டப்போட்டிக்கும், சிறந்த விளையாட்டு வீரர் இருவருக்கும்,பந்து காப்பாளர் (கோலி), பந்து உதைப்பவர் (பனால்டி), சிறந்த விளையாட்டுக்கழகங்கள் என பரிசில்களின் தொகை மிகையாக்கப்பட்டது போலவே காணப்பட்டது. (இறுதி ஆட்டங்களில் கலந்து கொண்ட அனைத்து வீரர்களுக்கும் கூட தனித்தனியாக பரிசில்கள் வழங்கப்பட்டன) பரிசில்கள் யாவும் கழக அங்கத்தவர்களாலேயே வழங்கப்பட்டது நல்ல முறையே எனினும் பரிசில்கள் வழங்க வீரர் ஒருவரை அழைக்கும் போது பரிசைக் கொடுப்பதற்கும் ஒருவர் என அறிவிப்பு நீண்டிருந்ததும் யார் யாருக்கு எதை வழங்குவது என்பது முன்பே திட்டமிடப்படாததும் வருகிற விளையாட்டுக்களில் தெளிவுபடுத்தப்படுவது விரும்பத்தக்கதாகும். இந்தப் போட்டியில் Luzern- Lyss கழகங்கள் மோதி Luzern கழகம் 2-0 என்ற கோல்களால் றோயல் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

**போட்டி 2 :**

விடுதலைப்புலிகளாலும் மாவீரர் நினைவு கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியும் அதே Wankdorf மைதானத்தில் நடத்தப்பட்டது. 32 கழகங்கள் இதில் பங்குபற்றின. விளையாட்டு ஒழுங்கமைப்புக்கள் வரவேற்கத் தக்கமுறையில் அமைந்திருந்தன.

இவ்விரு போட்டிகளிலும் - ஒவ்வொரு திடலிலும் எந்தெந்த கழகங்கள் மோத இருக்கின்றன என்ற அறிவிப்புடன் நிறுத்திக் கொள்ளாது, போட்டிகளின் நிலையினை பார்வையாளர்களுக்கு அடிக்கடி அறிவிப்பு செய்யப்பட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். மேலும் அரையிறுதிப் போட்டியில் பங்குபற்றிய விளையாட்டுக் கழகம் உடனே இறுதிப் போட்டிக்கும் தயாராக வேண்டிய நிலையினை தவிர்த்துக் கொள்ளவும் மாற்று வழிகள் மேற்கொள்ளப்படவேண்டும். மாவீரர் நினைவுக்கிண்ணப் போட்டியில் போட்டி 1 இனை நடாத்திய றோயல் கழகமே வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கி நிகழ்ச்சி ஏற்பாட்டில் மட்டுமல்ல விளையாட்டிலும் வீரர்கள் என்பதை நிரூபித்துள்ளார்கள். ஓய்வு நேரத்தில் வீடியோ,சினிமா,பிறந்தநாள் என்று பொழுதைக் கழிக்கும் எம்மவர்கள் மத்தியில் உதைபந்தாட்டப் போட்டிகள் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதை மறுப்பதற்கு இல்லை.

*** இளங்கோ ***

www.tamilarangam.net

# அகதிகள் தினம்

வருடாவருடம் சுவிற்சர்லாந்தில் அனைத்து கன்ரோன்களிலும் June மாத நடுப்பகுதிகளில் அகதிகள் தினவிழா நடைபெறுவது வழமை. இவ்வருடமும் இவ்வகையான விழாக்கள் ஆங்காங்கே நடந்தேறின. Bern மாநகரில் சுவிற்சலாந்து பாராளுமன்ற முன்றலில் நடைபெறும் அகதிகள் விழா ஏனைய கன்ரோன்களில் நடப்பதைவிட பெரிதாகவே நடைபெற்றது.

இவ்விழாவில் அனைத்து நாட்டு அகதிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சுவிசு பாராளுமன்ற முன்றல் பல்தேசிய இனங்களின் கூடமாக காட்சியளித்தது. அனைத்து நாட்டு அகதிகளும் தத்தமது உணவு வகைகளையும், தகவல்களையும் சுவிசு மக்களிடமும்,ஏனைய அகதிகளிடமும் பரிமாறினர். இவ்விழாவில் தமிழர்களுக்கு நான்கு கூடாரங்கள் வழங்கப்பட்டிருந்தது. இவற்றில் ஒரு கூடாரத்தில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களினால் வெளியிடப்பட்ட சஞ்சிகைகள் அனைத்தும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. மேலும் புலம் பெயர்ந்த எழுத்தாளர்களின் கவிதைத் தொகுதி, சிறுகதை தொகுதி விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது. இத்துடன் இந்திய நாவல்கள் சிறுகதைகள், சிறுவர் புத்தகங்கள் என்பனவும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

இவற்றிற்கு நடுவே ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மேடையில் பல்வேறு நாட்டு அகதிகள் தத்தமது கலாச்சார நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினர். இம்முறை பல தமிழ் நிகழ்ச்சிகள் நடை பெற்றது குறிப்பிடத்தக்கது. வழமைபோல் குர்திசுதானியர்களின் கூட்டு நடனம் எல்லோ ரையும் கவர்ந்தது.

தமிழ் நிகழ்ச்சிகளில் முதல் நிகழ்ச்சியாக Basel இல் இருந்து வந்திருந்த சிறுமி பூஜா நடனம் ஆடினார். இதனைத் தொடர்ந்து பாரதி கலைக்குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கிராமிய நடன நிகழ்ச்சி இடம்பெற்றது. ஆண்களும், பெண்களும் கூடி ஆடியதால் பார்வையாளர்களை நன்கு கவர்ந்திருந்ததை காணக்கூடியதாக இருந்தது. நடனம் சிறப்பாக அமைந்திருந்தாலும் பாடல்கள் நடனத்துடன் ஒத்திசைவில்லை என்பது பலராலும் சுட்டிக்காட்டப்பட்ட குறையாகவே இருந்தது. இந்நிகழ்ச்சி ஆரம்பத்தில், இந்நடனத்தில் இடம் பெறும் "முத்திரைகள்" பற்றிய விளக்கம் ஜேர்மன் மொழியிலும், தமிழிலும் அளிக்கப்பட்டது மட்டுமல்லாமல் இந்நடனம் சித்தரிக்கும் சம்பவத்தினையும் ஜேர்மன் மொழியில் துண்டுப் பிரசுரமாக விநியோகிக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்ச்சியை தொடர்ந்து மழை பெய்ததால் பார்வையாளர்கள் கலையத் தொடங்கினார்கள். மழை ஒரு முடிவிற்கு வந்த பின்னர் ஓரங்க நாடகம் இடம் பெற்றது. இந்நாடகத்தில் இரு தமிழர்கள் சுவிசு நாட்டவர் போல் அவர்களின் பாணியில் கதைத்து நடித்திருந்தனர். இந்நிகழ்ச்சி அனைவரையும் அவதானிக்கும்படி செய்திருந்தது. ஒரு சுவிசு நாட்டவர் Restaurant இல் இருப்பது போலவும் ஒரு தமிழர் Restaurant இற்கு வந்து அவருடன் அதே மேசையில் இருந்து உரையாடுவது போலவும் காட்சி அமைந்திருந்தது. ஆரம்பத்தில் சுவிசு நாட்டவர் தமிழர்களிற்கு எதிராகவே கதைக்கின்றார். இவ்வெதிர்ப்பு பிழையானது என்பதையும், தமிழர்களின் வாழ்வு இங்கு எப்படி இருக்கின்றது என்பதையும் விளக்கும் வகையில் இந்நாடகம் அமைந்திருந்தது. மேலும் இந்நாட்டவர் பலரின் அகதிகள் தமது வரிப்பணத்தில் சொகுசாக வாழ்கின்றார்கள் என்ற பொதுக் குற்றச்சாட்டிற்கு நல்ல பதிலடியும் கொடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கீழைத்தேசிய வாத்தி யங்களுடன் ஓர் பாடல் நிகழ்ச்சி இடம் பெற்றது. பாடல்கள் கோசங்களாகவும் பிரச்சாரமாகவும் இருந்திருந்தாலும் பாடியவர்களின் குரல்வளம் நன்றாகவே இருந்தது. அத்துடன் வாத்தியக் கருவிகளை வாசித்தவர்கள் தமது புலமையை வெளிப்படுத்தி இருந்தனர்.

வழமையாக நடைபெறும் தமிழ் பொப் நிகழ்ச்சியும் இடம்பெற்றது. இந்நிகழ்ச்சியில் மேலைத் தேசிய வாத்தியங்களே பெருமளவு பாவிப்பதால் இந்நாட்டவர்கள் இது உங்கள் நாட்டு இசையா? என்ற கேள்வியை எழுப்புவது வழமையாக இருந்த போதும், இதற்கு முதல் நடைபெற்ற நிகழ்ச்சிகள் இக்கேள்விக்கு இம் முறை பதில் கொடுப்பதாக அமைந்தது. இந் நிகழ்ச்சி கூடிய நேரத்தை ஆட்கொள்வது வழமையாக இருந்தாலும் இம்முறை ஓரிரு பாட்டுடன் நிகழ்ச்சியை முடித்திருந்தது சிறப் பாக இருந்தது.

தமிழ் பார்வையாளர்கள் தமிழ் நிகழ்ச்சிகள் நடைபெற இருப்பதால் கலையாமல் மழை தூறலிற்கும் நடுவே நின்றிருந்ததை பார்க்கும் போது நம்நாட்டு நிகழ்ச்சிகளில் எம்மவர் கொண்டிருந்த ஆர்வத்தினை காணக்கூடியதாக இருந்தது.

இறுதி நிகழ்ச்சிகளாக தமிழீழ விடுதலைப் புலிகளால் ஒழுங்கு செய்யப்பட்ட கோலாட்டமும், காவடியாட்டமும் இடம் பெற்றது. இந் நிகழ்ச்சி ஆரம்பிக்கும் போது மீண்டும் மழை தூற ஆரம்பித்து விட்டது. இம்மழையிலும் கலைஞர்கள் சோர்வடையாமல் இந்நடனத்தை ஆடி முடித்திருந்தது வரவேற்ககூடியதே !

* அருண் *

www.tamilarangam.net

# அதிகாரப்போட்டியில் ஆப்கானிஸ்தான்

" இன்றும் இந்தமண்ணில் யுத்தம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. தலைநகர்காபூலில் கடுமையான சண்டை. நீரில்லை, உணவில்லை, மின்சாரமும் இல்லை. நூற்றுக்கணக்கில் மக்கள் பலியாகிப்போயினர். "

ஆப்கானில்தான் நிலைமைகள் குறித்து கடந்தமேமாதத்தில் இருந்து வாரம் தோறும் நாம் அறியும் செய்திகள் இப்படித்தான்.

சோவியத்படைகள் நிலைகொண்டிருந்ததால் 13 வருடங்கள் யுத்தத்தால் சிதைக்கப்பட்ட தேசம் 10இலட்சம் மக்களை படுகொலை கண்டது. 50இலட்சத்திற்கும் அதிகமான மக்களை அண்டைநாடுகளில் அடைக்கலம் தேடி ஓடவைத்தது.

சோவியத் படைகளுக்கும் அதன் தயவில் ஆட்சிபுரிந்த நாஜிபுல்ல (தாயகம்கட்சியின்) அரசுக்கெதிராகவும் இசுலாமி மதத்தளத்தில் நின்று போரிட்ட ஏழுஇராணுவக் கிளர்ச்சிக் குழுக்களும் (முஜாகதின்கள்), சோவியத் படைகள் வெளியேறிய மூன்று வருடங்களின் பிற்பாடு இன்று தமக்குள் ஐக்கியமின்றி மோதிக்கொள்கின்றன. முக்கியமாக கடந்த ஏப்பிரல் இறுதியில் நஜிபுல்லாவின் அரசைக்கவிழ்த்து ஆட்சியைக்கைப்பற்றிய கிளர்ச்சிக்குழுக்கள் அதிகாரப் போட்டிக்காக சண்டையிடுவதாகவே வெளியே தோற்றம் அளித்தாலும் உண்மையென்னவெனில் இதன்பின்னணியில் உள்ள சக்திகள் ஆப்கானித்தானில் ஒரு உறுதியான அரசு அமைவதை விரும்பவில்லை என்பதே.

ஆப்கான் மண்ணை ஆக்கிரமித்த முதல் அந்நிய சக்தி சோவியற்யூனியன் அல்ல. மாறாக கி. பி. 800ம் ஆண்டுகளில் இறுதியில் இருந்து 1930வரையான அதன் வரலாறு முழுவதும் பாரசீகர் அராபியர்,மொங் -கோலியர், ருசியர், பரிட்டிசார் போன்றோரின் ஆக்கிரமிப்புப் போட்டி மைதானமாகவே ஆப்கானில்தான் இருந்திருக்கிறது.

ஆயினும் கி. பி 1800களின் நடுப்பகுதி யில் ஆப்கானை ஆக்கிரமிக்க பிரிட்டன் தொடுத்த யுத்தமே வரலாற்றில் நிகழ்ந்த முதல் பெரிய யுத்தமாகும். இவ்யுத்தம் (1838-1842) 4வருடங்கள் நீடித்திருக்கிறது. இருந்தும் இந்த யுத்தத்தில் தோல்வியைத் தழுவிய பிரிட்டன் அரசு மீண்டும் 1879 இல் இரண்டாவது யுத்தத்தை ஆப்கான்மீது திணித்து நாட்டை ஆக்கிரமித்துக்கொண்டது

பிற்பாடு 1881,1884ஆண்டுகளில் படையெடுத்த ருசியரோடு சாமாதான ஒப்பந்தமும் போட்டுக்கொண்டது. 1919இல் அமானுல்லாக் மன்னன் தலைமையில் பிரிட்டிசாரோடு நிகழ்த்திய போர் ஆப்கான் வெளியுறவுக் கொள்கையை தானே வகுக்கும் அதிகாரத்தை பெற்றுக்கொடுத்தது. தொடர்ந்து நிகழ்ந்த யுத்தங்களினோடு 1929இல் ஆப்கான் இசுலாமிய குடியரசுஎன பெயர்கொண்டது தொடர்ந்து மன்னர் ஆட்சியில் இருந்துவந்த ஆப்கானித்தான் 73இல் இதற்கு முற்றுப்புள்ளி வைத்தது. 78இல் சோவியத் ஆதரவு சக்திகள் நாட்டை கைப்பற்றவும் அமெரிக்கா, ஈரான், பாகிஸ்தான் மதவாத முஜாகுதீன் குழுக் களுக்கு உதவிசெய்யவும் ஆப்கான் மீண்டும் யுத்தசேற்றில் மூழ்கத்தொடங்கியது.

சிப்பகதுல்லா



இரபானி
(நாட்டின் புதிய தலைவர்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறிப்பாக 79ம் ஆண்டில் பாபரக்கர் மாரின் தலைமையிலான ஆட்சியை பாதுகாக்க லீயோனில், பிரேவ்னேவ் 90ஆயிரம் படைகளை ஆப்கானுள் அனுப்பியபோதே முகாஜிதீன் குழுக்கள் வீறுகொண்டு போரில் குதித்தனர். அப்போதைய அரசின் உளவுப் படையின் தலைவராக இருந்த நஜிபுல்லா சோவியத் அரசுக்கு விசுவாசியானபோது பாபரர்கர்மாரின் அரசு கவிழ்க்கப்பட்டு 86ம் ஆண்டில் நஜிபுல்லா நாட்டின் தலைவராக் கப்பட்டார்.

சோவியத்யூனியனில் வலுத்துவந்த அரசியல் பொருளாதார நெருக்கடிகளும் குறிப்பாக அமெரிக்காவின் உதவியுடன் போரிட்ட முகாஜிதீன் குழுக்களிடம் சோவியத் படைகள் சந்தித்த பெரும் இழப்புக்களும்தான் கொர்பச்சேவ் அரசை அப்போதைய அமெரிக்க அதிபர் றீகனுடன் ஒரு சமாதான திட்ட வரைவுக்கு முன்தள்ளியது. இதன்படி 89ம் ஆண்டு 15ம்திகதியுடன் சோவியத் படைகள் ஆப்கானிலிருந்து வெளியேறின.

90ம் ஆண்டின் இறுதியில் அமெரிக்கா சோவியத்தோடு ஒப்பந்தம் போட்டுக் கொண்டது. அது இனிஇருதரப்பும் ஆப்கா னிஸ்த்தான் சம்பந்தப்பட்ட எவருக்கும் ஆயுதங்கள் வழங்குவதில்லை என்பதே. இதனைத் தொடர்ந்து ஐ.நா.வில் சமாதான முயற்சிகளும் முளைவிடத்தொடங்கின. நஜிபுல்லா அரசு சில முஜாகதீன் குழுக்களுடன் சமரசத்துக்கு வந்தது. அவர்களின் கட்டுப் பாட்டிலுள்ள பிரதேசங்களின் அரசு அதிகார பொறுப்புக்களை அவர்களிடமே கையளித்தது.

மேலும் ஐ. நா. வரைந்த சமாதான திட்டத்துக்கு அமைய ஒரு ஜனநாயக சூழலை ஏற்படுத்தி உருவாகும் அந்த ஜனநாயக நீரோட்டத்தில் தானும் ஒருவாறு நீந்தி மிதக்கலாம் என்றுதான் நஜீபுல்லா பிரயத்தனப்பட்டார். ஆனால் இசுலாமிய அடிப்படைவாத சக்திகள் முகாஜதீன் குழுக்கள், கம்யூனிஸ்டுக்கள் முற்றாக அழிக்கப்படவேண்டும் அதிலும் கொடுமையான யுத்தத்திற்கு காரணமான நஜிபுல்லாவும் அவரது அரசும் தேசத்துரோகிகள் இவர்களுக்கு தண்டனை கொடுப்பதே தமதுநோக்கம் என்றும் தொடர்ந்து சண்டைசெய்தனர்.

ஏப்பிரல் மாத இறுதியில் நஜீபுல்லாவின் அரசில் முக்கியபதவி வகித்தவர்கள் முகாஜதீன் குழுக்களுடன் இனைந்ததன் விளைவு நஜீபுல்லா அரசு கவிழ்க்கப்பட்டது. 50பேரைக்கொண்ட கவுன் சில் ஆட்சியை கைப்பற்றியது. கவுன்சிலின் தலைவராக (நாட்டின் தலைவராகவும்) பேராசிரியர் சிப்பகதுல்லா பதவியேற்றார். கிளர்ச்சிக்குழுக்களின் தலைவர்கள் 30பேரும் இசுலாமிய மதகுருமார் பத்துப்பேரும், அரசியலாளர்கள் 10பேருமாக புதிய ஆட்சியில் அதிகாரம் பெற்றனர்.

மே முதல் வெள்ளியன்று காபூலில் பவுல்பவுலிசிகாற்றி மகுதீ முன்பாக நாட்டின் தலைவர் நிகழ்த்திய உரையில்
"யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு விட்டது எல்லா முஜாகதீன் குழுக்களும் ஐக்கியப்படுவோம்" என்று அறைகூவல் விடுத்தார். ஆயினும் புதிய கவுன்சில் பதவியேற்ற இரண்டாம் நாளிலேயே நாட்டின் தலைநகரம் உட்பட தென்பகுதியிலும் யுத்தமேகங்கள் சூழ்ந்தன. கெப்சி இசுலாம் என்ற முஜாகதீன் குழுவின் தலைவரும் புவுதுன் இனத்தைச் சேர்ந்தவருமான குலாபின் கெக்மடாயர் புதிய அரசுக்கெதிரான தாக்குதலில் இறங்கினார். புதிய அரசில் முழுக்க முழுக்க கிளர்ச்சியாளர்கள் மட்டுமே பங்குபற்றவேண்டும் என்பதே இவரது வலியுறுத்தல்.

ஏவுகணைகள் பீரங்கிகள் எல்லாம் சாதாரணமாக வெடிக்கத்தொடங்கின. ஐ.நா. வின் சமாதான திட்டம் வெறும் காகிதம் ஆகியது. கெக்மடாயர் தலைமையிலான குழு ஆப்கானிலுள்ள 7 கிளர்ச்சிக்குழுக்களில் பலம்வாய்ந்த ஒருகுழு என்பதோடு வடஆப்கானை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது.

6 கிளர்ச்சிக் குழுக்களை இணைத்து அதன் தலைமையை கைப்பற்றியிருக்கும் தஜி இனத்தைச் சேர்ந்த அகமட்மகுத் தற்போதைய ஆப்கானின் பாதுகாப்பு அமைச்சர்.

இந்த பலம்பொருந்திய இரு கிளர்ச்சிக் குழுக்களும் கைகோர்த்தால்தான் ஆப்கானில் இன்று தொடரும் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்படும்.

பவுதுன், தஜிகி, உல்பெக் ஆகிய மூன்று முசுலீம் இனங்கள் வாழும் நாடுதான் ஆப்கான். இவர்களில் தஜிகி, உல்பெக் பெரும்பான்மை இனங்கள். நாட்டின் தென் பகுதியை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் உல்பெக் இராணுவம் (இதில் நிறை யப்பேர் நஜீபுல்லா இராணுவத்தில் இருந்தவர்கள்) இப்போதைய புதிய அரசில் இராணுவத்துடன் இணைந்து கெக்மடாயர் கிளர்ச்சிக் குழுக்களுக்கு எதிராக பலமாய் மோதுகிறது. கெக்மடாயர் யுத்தமற்ற சூழலை விரும்பவில்லை எல்லா சக்திகளும் ஒன்று சேர்ந்து ஆட்சியமைக்கும் சூழலை குலைத்து விட்டார் என்று எதிர்தரப்பினர் விசனப் படுகின்றனர்.

ஆப்கான் - பாக் எல்லைப் பிரதேசமான **peshawar** இனை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் ஜமாத்தே இசுலாம் என்ற குழுவின் அரசியல் மூளை என்று வர்ணிக் கப்படுவருமான **URHANUDIN RABANI** கெக்மடாயருடனான

www.tamilarangam.net

சமாதான முயற்சியில் இறங்கினர். இவர் யூன் இறுதியிலிருந்து நாட்டின் தற்காலிக தலைவர் பதவியேற்று இருக்கிறார். நாட்டின் தலைவர் பதவியை ஏற்றிருக்கும் Rabani 18 மாதங்களில் பொதுத் தேர்தல் வைப்பதற்காக எல்லா முஜாகதீன் குழுக்களோடு சமரச முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். இந்த சமரச முயற்சிக்கு கெக்மடாயர் முன்வைத்த நிபந்தனை :

உஸ்பெக் இராணுவம் தலைநகர் காபூலை விட்டு வெளியேற வேண்டும் என்பதே பிந்திய தகவல்களின்படி கெக்மடாயர் நாட்டின் தலைவர் பதவி தனக்கே கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் செயற்படுவதாக அறிய முடிகிறது.

<< சமாதான முயற்சி பற்றி Rabani குறிப்பிடும் போது கெக்மடாயரின் இராணுவ குழுக்கள் இணைந்து கொண்டால் 2500 போராளிகள் தான் வருவார்கள். ஆயினும் அவர் சொல்லும் திட்டம் 10 ஆயிரம் இராணுவத்தை அல்லவா குறைக்கிறது. இது தேவையா >> என்றார்.

ஒரு புறம் பலம் பொருந்திய கிளர்ச்சி குழுக்களுக்கிடையில் கடுமையான சண்டை மறுபுறம் நாஜிபுல்லா உட்பட அவரது தாயகம் கட்சியை சேர்ந்தவர்களை கம்யூனிஸ்டுக்கள் யுத்த குற்றவாளிகள் என்றும் காபூலில் நிறைய துரோகிகள் உண்டு அவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என்று சட்டம் பிறப்பிக்கப்பட்டு தண்டனைகளும் கொடூரமாய் நிறைவேற்றப்படுகின்றன. ஐ.நா அலுவலக த்தில் தஞ்சம் புகுந்திருக்கும் நஜிபுல்லாவை தம்மிடம் ஒப்படைக்கும்படி கிளர்ச்சிக் குழுக்கள் வலியுறுத்துகின்றன.

ஆப்கானிஸ்தானில் அமைதிச் சூழல் அவ்வளவு எளிதில் தோன்றிவிடப் போவதில்லை. ஆயுத வன்முறை பயங்கரமாக தலைவிரித்தாடுகிறது. பசி,பட்டினி,கொள்ளை தொற்று நோய்கள் மலிந்து கிடக்கின்றன. யுத்தத்தால் இடிந்து நொருங்கி நிலத்தில் வீழ்ந்து கிடப்பது இலட்சக்கணக்கான கட்டிடங்களும் வீடுகளும் மட்டுமல்ல நாட்டின் பொருளாதாரமும் தான். இந்நிலையில் ஆட்சிப்பொறுப்பை ஏற்கத் துடிக்கும் முஜாகதீன் குழுக்கள் நாட்டின் பொருளாதாரத்தை தூக்கி நிமிர்த்துவது என்பது மிகப்பெரிய கடின பணி. இதற்கிடையில் மீண்டும் யுத்தம் தனது கோரப் பற்களை நீட்டிநிற்கிறது.

இன்றைய யுத்தத்தின் கதாநாயகன் கெக்மடாயர் ஈரானின் இஸ்லாமிய புரட்சித் தலைவர் அயத்துல்லா கொமேனியின் வாரிசு என்று வர்ணிக்கின்றன. மேற்குலகப் பத்திரி கைகள். அதே வேளை மற்றும் ஆப்கான் சியாட் இஸ்லாமிய குழுவுடன் கெக்மடாயர் குழு கூட்டு முன்னணி அமைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

ஈரானால் வளர்க்கப்பட்டு அண்டை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் இஸ்லாமிய அடிப்படைவாதம் ஆப்கானிஸ்தான் ஊடாக மத்திய ஆசியா பரப்பு முழுவதும் ஒரு வட்ட அலையாக எழும்பத் தொடங்கியுள்ளது.
ஆப்கான் மக்களில் 30/ சியாட் முசுலிம்கள். இங்கே ஒரு ஸ்திரமான (நிரந்தர) அரசு உருவாகுமெனில் அதில் சியாட் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக உள்ள முஜாகதீன் குழுக்களே கூடிய அதிகாரங்கள் பெற வேண்டும் என்பதே ஈரானின் நோக்கம். தற்காலிக அரசின் உள்நாட்டு அமைச்சராக சியாட் இன முஸ்லீம் ஒருவர் பதவியேற்றுள்ளதும் கவனத்திற் கொள்ள வேண்டியது.

ஆப்கானில் ஒரு இசுலாமிய அடிப்படைவாத ஆட்சி அதிகாரம் பெறுமா னால் இது மத்திய ஆசியா முழுவதும் பரவி ஒரு ஆபத்தான நிலைமையை உண்டு பண்ணும் என்றும் ரசியா, சீனா இந்தியா முதல் மேற்குலகங்கள் வரை அச்சம் கொள்கின்றன. ஆப்கானில் இந்த இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் முதல் தலைவராக திகழ் பவர் கெக்மடாயர். அதே வேளை புதிய ஆட்சியில் சேர்ந்திருக்கும் அக்மட்மகுத் ஜமாத்தேக் குழு உட்பட பல கிளர்ச்சிக் குழுக்கள் இஸ்லாமிய மதவெறியையே கொள்கையாக கொண்டுள்ளன. இவர்கள் எல்லோரும் சோவியத் ஆக்கிரமிப்புக்கு எதிராக இஸ்லாமிய மததளத்தில் நின்று போராடிய வர்கள் தான்.

இன்றைய அரசு பழைய சோவியத் ஆதரவு அரசில் தளர்த்தப்பட்டிருந்த இஸ்லாமிய மதச் சட்டங்களை மீண்டும் புதுப்பித்துள்ளன. பெண்கள் பர்தா போட வேண்டும் என்றும் மது அருந்துதல் தடை செய்யப்பட்டுள்ளது என்றும் அறிவித்துள்ளது.

ஆப்கான் யுத்தத்தில் சோவியத்யூனிய னுக்கு எதிராக மட்டுமன்றி தமது நலன்களை பேணுவதற்காகவும் கிளர்ச்சிக் குழுக்களுக்கு அமெரிக்கா, ஈரான் பாகிஸ்தான்,சவூதி அரேபியா போன்ற நாடுகள் உதவிகளை அள்ளிக் கொடுத்தன. இன்று இந்த முஜாகதீர் குழுக்கள் ஆட்சியைக் கைப்பற்றும் நிலையில் இந்த குழுக்களினூடாக தமது நலன்களை உறுதிப்படுத்துவதில் அந்நிய சக்திகள் தீவிர கவனம் செலுத்துகின்றன. இதற்கான வாய்ப்பு இல்லாத போது மீண்டும் கிளர்ச்சிக்குழு க்களை யுத்த சூழலுக்குள் தள்ளி விடுவார்கள். இன்றைய ஆப்கான் நிகழ்வுகள் இதைத்தான் உறுதிப்படுத்துகின்றன.

•சி.அழகன்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## சிறுகதை :

லக்சுமி வெட்டிக்கொண்டிருந்தாள்.

வெட்டி கை விரல்களைச் செருகி லாவகமாக உரிக்கும் அனுபவம் இரண்டு மூன்று வருடங்களாகவாவது இருக்கவேணும் போல் தோன்றியது.

ஒன்றரைக் கிலோ கேட்க இரண்டும் இருநூறு கிராமிலும் நின்றது தராசு முள்.

சயிக்கிளை தெருவோரம் சாத்திவிட்டு இறங்கும் போதே அவளை கவனிக்கத் தோன்றியது.


முன்பு ஒரு முறை பழைய புத்தகக்கடையில் நின்று அரைவிலைக்கு புத்தகங்களை பேரம் பேசிக்கொண்டு நிமிர. . . . . .

முற்றத்துடன் கூடிய வீடு. முற்றத்தில் இரண்டு தென்னை மரம். தென்னை மரங்களுக்கிடையில் சாரமிறக்கி வீட்டின் கூரையில் இருந்து பந்தல் அமைத்திருந்தார்கள். தராசுக்கும் முதலாளிக்கும் என.

தெருச் சந்தியில் இங்கே புரைலர்கள் விற்கப்படும் என்ற போட்டும் அம்புக்குறியும் காட்டிய வழியில் வந்து இறங்க, வீட்டு முகப்பிலும் " போட் " கட்டித் தொங்கவிட ப்பட்டிருந்தது.

லட்சுமி நின்றிருந்தாள். கேட்கும் நிறைகளுக்கேற்ப கோழிகளைத் தூக்கி நிறைபுணர்ந்து இரண்டு செட்டைகளையும் மடக்கிச் செருகி பூட்டுப்போட்டு தராசுப்பக்கம் எறிந்து கொண்டிருந்தாள்.

## பலிபீடம்



யாரிவள். . . . . . . . . தேவதை.

கத்தரிப் பூக்கலரில் துண்டுத் தாவணி, காலில் கொலுசு, தலையில் முழம் மல்லிகைப் பூ சொல்லியது இந்திய தமிழ்ப் பெண்ணென. இருபது இருபத்தைந்து வயது இருக்கும், அழகி.

இங்கு நின்று கொண்டிருந்தாள்.
விடை கிடைத்தது போல இருந்தது.

சிறிய கோழிப்பண்ணையுடன் கூடிய இறைச்சிக்கடை.
கடை என்று சொல்லமுடியாது வீடு.

பள்ளிக்கூட வாங்குகளில் ஏறி, ஓடி, சத்தம் போட்டு, அடிவாங்கி, சத்தம் போடாமல், இனி என்ன விளையாடலாம் என வகுப்பே திட்டமிட்டு பூட்டுபோடலாம் என்ற முடிவுடன். . . . . கைகளை உயர்த்த பிடரிக் குள்ளால் கை மடக்கி பூட்டுப் போட்டு இறுக்க. . . . . . திமிறி, திமிற முடியாமல் முழிபிதுங்கிய நினைவு வந்தது.
கோழி முழிபிதுங்கிக் கொண்டிருந்தது.

ஒரு முழு மரத்தின் அடிப்பாகம்.
ஒரு அடி குறுக்குப்பருமன் உள்ள கனக்குற்றி, மூன்று தடித்த மரக்கட்டைகளுக்கிடையே வைத்து ஆணியால் தைக்கப்பட்டிருந்தது பலிபீடம்.

விளிம்புகள் செதுக்கி வளவளப்பாக இருந்தது.

www.tamilarangam.net

கரையெல்லாம் எப்பவோ ஓடிக்காய்ந்த இரத்தக் கறள்கள் கோடு போட்டிருந்தது.

செட்டைகளின் பூட்டை அவிழ்க்காமலே தலையை மரக்குற்றியின் மேல் வைத்து வெட்டக் கையுயர்த்த . . . . . . தலையையும் சேர்த்துக் கொடு. . . . . என்ற குரலையும் பாராது கையை இறக்கினாள் லட்சுமி.

பெண்ணா இவள். . . . .
ராட்சதி. . . . . கோழிவாங்க வந்தவர்களில் யாரோ ஒருவர் முணுமுணுத்தது கேட்டது.

இது போல் எத்தனை. . . . . . கேட்டிருப்பாள்.

எத்தனை பேர் இவள் பின்னால் சுற்றி. . . . தொடர்ந்து வந்து கோழியின் கழுத்து துண்டுபட. . . . . . தம் ஆசையை பலியிட்டு ஓடியிருப்பார்கள்.

பார்வையில் வன்மம் தெறித்தது.
முகத்தில் இறுக்கம்.

கோழியின் தலை துண்டுபட்டிருந்தது. உடம்பில் இருந்து இரத்தம் இறங்கிக் கொண்டிருந்தது.
வன்மம் தெறித்து இறுகிய அவளின் முகத்தில் சிவப்புப் பொட்டுக்கள்.
கையில் கத்தி.
காளியாக தோன்றவில்லை. அழகு.
பார்த்துக்கொண்டே இருக்கத் தோன்றும் அழகு.
இவள் . . . . . காளியில்லை அழகி.
வன்மமுள்ள பெண். அழகி.

வன்மம். . . . . முகத்தில் வன்மம் , வன்மம் வீறுகொண்டிருந்தது. அதுவே இயல்பென இயல்பாய் இருத்தல் என வீறுகொண்டிருந்தது.

என்னுடைய முறை வர. . . . நிமிர்ந்து பார்த்து தலை வேண்டாம் தோலுரித்துக் கொடுங்க. . . . . . செட்டைகளைப் பிடுங்கிக் கொண்டிருந்தவள் நிமிர்ந்தாள்.
வேறு மொழி, வேறு பார்வை. இவன் அன்னியன் சிலோன்காரனா? கண நேரத்தில் அவளின் முகத்தில் கேள்விகள் தோன்றி மறைவது போல் இருந்தது.

முகத்தில் சினேகம் வர தலையாட்டினாள்.
இதமாக இருந்தது மனதுக்கு. ஆனாலும் அடிமனதில் இவளால் எப்படி முடிகிறது? எனக் கேட்கத் தோன்றியது. எப்படி? எப்படி இவளால் முடிகிறது??

அவள் கோழியை எடுத்து வெட்டக் கையுயர்த்த. . . . . .
என்னை அறியாமலே கண்களை மூடிக் கொள்ள. . . . . . .
முகத்தில், நெஞ்சில், மூடிய இமைகளில் இளம் சூடு. சிவப்புத் தெளித்திருந்தது.

வன்மம், அவளின் முகத்தில் சினேகம் கலைந்து மீண்டும் வன்மம்.
லட்சுமி பார்த்தாள், பார்வையில் நெருப்பு.

தொழில். . . . . இது தொழிலடா. . . .
பெண் செய்யக் கூடாதா? ஆண். . . . . அவன் தான் எதுவும். . . . . . . எது வேணுமென்றாலும். . . . . .
உங்களுக்கே உரிய உசத்தியா?. . . . .
எது?. . . . . . எது?. . . . . . . . . . .
கத்துவது போலிருந்தது அவளின் பார்வை.

வெட்டணும் ஒவ்வொரு கழுத்தும் ஆணின் கழுத்தா வெட்டணும்.
வெட்டுப்பட்டுக் குவியலாக கிடந்தது தலைகள்.
முண்டம் கோழி.
எனது கழுத்தும் துண்டாகி இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.
திடுக்கிட்டு எழும்ப உடம்பு நனைந்திருந்தது.
உடம்பு, கை கால் , ஒவ்வொரு மயிர்க் கால்களும் வியர்த்து நனைந்திருந்தது.

கண்களை மூட வெட்டிக் கொண்டிருந்தாள் லட்சுமி.
வெட்டும் ஒவ்வொரு கோழியும் துண்டாடி விழ. . . . . . . . ஆண்களின் தலைகள். முண்டம் கோழி.

எனது கழுத்தும் துண்டாகி. . . . .
கண்களை மூட லக்சுமி வெட்டிக் கொண் டிருந்தாள்.

ஜீவன்

→ 35 ன் தொடர்ச்சி

*அரசியல் பொருளாதார பிழைகள், ஆயுதக்குவிப்பு, லஞ்ச முறைகேடுகள் போன்றவை மூன்றாவது உலக நாடுகளின் ஏழ்மைக்குக் காரணமாக அமையும் சில முக்கிய காரணிகள், பணக்கார நாடுகள் தங்கள் ஆயுத ஏற்றுமதி, பொருளாதாரக் கொள்கையில் நரித்தனம், லஞ்ச முறைகேடுகளால் சம்பாதித்த பணத்தை பாதுகாக்க இடமளித்தல் என்பனவற்றால் தங்கள் பங்கை ஆற்றுகின்றனர்.*

***இந்த அறிக்கையில் அறியக்கிடப்பது என்னவென்றால் பணக்கார வடக்கு ஏழை தெற்கிற்கு உதவி செய்யவில்லை, மாறாக வடக்கு பணக்காரனாகவிருக்க தெற்கு உதவிசெய்து கொண்டிருக்கிறது.***

– தேவா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிநாட்டில்
என் அப்பா.
யாராவது வெளிநாட்டில் என்றால்
நீண்ட தூரங்களுக்கப்பாலும்
மலைகளுக்குப் பின்னாலும்
சென்றிருப்பர்.
வருடத்தில் ஒரு முறை மட்டும்
ஊருக்கு வருவர்
என் அப்பாவும்
நீண்ட தூரங்களுக்கு அப்பால்
இருப்பதால்
காசு அனுப்புகிறார்
அதனால்
நானும் அம்மாவும் வாழமுடிகிறது.

ooo

என் அப்பாவை
நான் அறியேன்
எனக்கு தெரிந்தது
ஒன்று மட்டும்
என் அப்பாவிற்கு
பெரிய கை உண்டு
ஒரு மீசையும் உண்டு
அவர் ஊருக்கு வரும் போது
கொண்டு வருவார்
எனக்கொரு சொக்கலேட்டும்
அம்மாவுக்கோர் சட்டையும்
அப்போ சொல்வேன் நான்
நன்றி அப்பா !

எனக்கு தெரிந்தது
ஒன்று மட்டும்
என் அப்பாவிற்கு
பெரிய கை உண்டு

ooo

என் அப்பாவிற்கு
தொழிற்சாலை ஒன்றில்
வேலை.
தொழிற்சாலை என்றால்
மிகப் பெரிய வீடு
எங்கள்
தேவாலயத்தை விடவும்
பெரியது – அது
இயந்திரங்களை வைத்திருக்கிறது.

அப்பா
இயந்திரங்களோடு தான்
வேலை செய்ய வேண்டும்
சூரிய வெளிச்சமே காணாத
தொழிற்சாலை அது.
ஏனெனில் யன்னலே இல்லையாம்
இந்த தொழிற்சாலை
பணக்காரர் ஒருவருக்கு
சொந்தமாம்.
அவர் அந்தோனியாவைப் போன்று. . .
தொழிற்சாலையில் வேலை செய்தால் தான்
காசு கிடைக்கும்.

ooo

ஏனோ தெரியவில்லை
இப்போ அப்பா
காசு அனுப்புவதே இல்லை
கடைக்காரன்
எதுவுமே தருகிறான் இல்லை
ஏனெனில் அம்மாவிடம்
காசு இல்லையாம்.
" என்ர அப்பா காசு வரக்காட்டுவார் "
சொல்கிறேன் நான்
ஆனாலும் எங்களை
அவன் நம்புவதாய் இல்லை.

ooo

ஏனோ தெரியவில்லை
அப்பா காசு அனுப்புவதே இல்லை – இப்போ
அம்மா வேலைக்கு போக வேண்டும் –
ஒரு பாண் துண்டுக்காக
பணக்கார வீட்டு வேலைக்காரியாய் !
அம்மா வேலை முடிந்து
இரவு வீடு திரும்பினால்
கவலையாய் இருக்கிறாள்
அழுகிறாள் . . .
நானும் அழுகிறேன் . . . .

***ஜேர்மன் மொழிமூலம் : Francesco Miceli***
***தமிழில் : க. தனந்தன்***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளக் குமுறல்:

# ஐரோப்பாவில் தமிழ் மனங்கள்...!

ஐரோப்பா வாழ் தமிழ் சமூகத்துடனான தமது அனுபவமும், கசப்புணர்வும், S. மதியழகனின் உள்ளக்குமுறல்களாக இங்கு பீறிடுகின்றன. ஒரு நற் சமூகத்தின் தேவைக்காக வருந்துகின்ற அவரது உணர்வைக் கருத்தில் கொண்டு இக்கட்டுரையை இங்கு சேர்த்துள்ளோம். ஆனால் இவர் தமிழ் சமூகத்தின் ஒரு பகுதியை மட்டுமே இங்கு பார்த்திருப்பது பெரும் குறையாகும். குறிப்பிடக் கூடிய அளவிற்குப் பெருமளவாக இல்லாவிட்டாலும், தமிழ் மனங்கள் பல மனித நேயத்துடன் வாழ்கின்றன என்பதை நாம் மறுத்துவிட முடியாது. தனிமனித நிலையில் இருக்கும் வரை சமூகத்தில் காணப்படும் கசப்பான நிகழ்வுகள் எல்லாம் முழுச்சமூகத்தின் மீதும் வெறுப்பையும் விரக்தியையும் கொடுக்கத் தான் செய்யும். மனிதநேயம் கொண்ட ஒரு நேரான சமூகத்தை வேண்டுகின்ற அதற்காக தம்மால் இயன்ற முயற்சியில் ஈடுபடுகின்ற தமிழ் உள்ளங்கள் பல சுவிசிலும் சரி, இன்னும் ஐரோப்பாவிலும், வேறு நாடுகளிலும் இருக்கத்தான் செய்கின்றனர். மதியழகன் போன்ற உள்ளங்கள் தனிமனித உணர்வில் இருந்து தம்மை விலக்கிக் கொண்டு, இத்தகைய மனித உள்ளங்களுடன் தம்மையும் இணைத்துக் கொண்டால் சமூகத்தின் மீதான வெறுப்புணர்வில், விரக்தியிலிருந்து விடுபடலாம். செய்வீரா - மதியழகன் ?

ஆசிரியர் குழு

## பணம் ..........

இதுதான் பெரும்பாலான மனங்களின் நித்தியமந்திரம் .... என்ன வழிகளிலும் இதை அடைவதையே வாழ்க்கையின் இலட்சியம் என்று கருதுகின்றன. இந்த எண்ணப்பீடிகையினால் " காதல்,நட்பு, பாசம் " என்கின்ற மனித உள்ளத்து மென்மையான உணர்வுகள் கூட போலித்தனமாக, மெழுகு பூசப்பட்டு கொண்டாடப்படுகின்றது.

ஒருவருடன் இன்னொருவர் அறிமுகம் ஆகும்போது மற்றவர் எடை போடுகின்றார். " தனக்கு அவரால் ஏதாவது ஆதாயம் கிட்டுமா "என்று வழமையான பேச்சுக்களுடன் ஆரம்பித்து, ராமசாமி சங்கக் கடைக்குப் பக்கத்தில் பொன்னையா master இவர்களை தெரிந்து கொண்டவர் எனக் காட்டி அவரின் பிறப்பிடத்துடன் தொடர்புள்ளவர் என நியாயப்படுத்தி சற்று 'நெருக்கமாகின்றார். இதன் பின்தான் உள்ளத்து ஒநாய் ஊளையிடவே ஆரம்பிக்கின்றது. மெதுவாக ஆரம்பிக்கின்றார். " எனது மருமகன் வந்து ஒரு வருடமாகின்றது. இன்னமும் வேலையின்றித் தான் இருக்கின்றான். எப்படியாவது நீங்கள் தான்." இது தான் அவரின் உள்ளத்து எண்ணமே ஒழிய, சாதாரண மனித நேயமோ அன்றி சிநேகத்திற்கு இடப்பட்ட அடிக்கல்லோ அல்ல.

உயர்ந்த மனித குணங்களை எங்கே மதிக்கின்றார்கள் ....?, உள்ளத்து நல்ல குணங்கள் எங்கே கணக்கெடுக்கப்படுகின்றன ...? இதய சுத்தங்கள் எல்லாம் புதைக்கப்பட்டு விட்டன. புதைக்குழிகளுக்குள் போலியான சிரிப்புக்களும், பொய்மையான விசாரிப்புக்களும் இதயத்து அழுக்கை மறைத்து, வெளிப்படையாக முகங்களில் மட்டும் நர்த்தனமாடுகின்றன. "யாரோ ஒரு ஆங்கில ஞானி பட்டப்பகலில் விளக்கைப் பிடித்து வீதியில் செல்லும் ஒவ்வொரு முகத்தினருகேயும் சென்று பார்த்து,யாராவது மனிதர்கள் செல்கின்றார்களா ? " என்று தேடினாராம்.... அதுதான் சரியான வழியோ தெரியவில்லை. கார் வைத்திருந்தால் ஒரு தனி மதிப்பு, Citizen card கிடைத்திருந்தால் அதற்கு ஒரு மதிப்பு, நல்ல சம்பளத்தில் நல்ல கம்பனியில் வேலை செய்தால் ...., நாலு பேருக்கு வேலை எடுத்துக் கொடுக்கும் நிலையில் இருந்தால் .., ஒரு 1000Fr கை மாற்றாக வாங்க முடியுமென்றால்..... இப்படியாகத்தான் ஒருவருடன் நற்பை இல்லையில்லை அது நட்பில்லை... ஏதோ ஒன்றை ஏற்படுத்திக் கொள்கின்றார்களே ஒழிய,உள்ளங்களின் மீது யாரும் பிரியம் காட்டுவதில்லை.

வெறும் எதிர்பார்ப்புகளுடனேயே மனித உறவுகள் பிணைந்து கொள்கின்றன. தனக்கு ஏதாவது பாதகம் விளையும் எனும் போது நைசாக நழுவி விடுகின்றன. சாதாரணமாக ரயிலில் ஒருவர் அமர்ந்திருக்கின்றார். அன்று அவருக்கு யாருடனும் பேசும் மன நிலை இல்லை. அவருக்கு முன் இருக்கையிலும் ஒரு தமிழரே வந்தமர்கின்றார். அவர் வேறு கன்ரோன் ஆக இருக்கலாம் என்று தோன்றவே இவரின் மனம் மாறுகின்றது. பேச்சை ஆரம்பித்து எந்த இடம், ஊரில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

எந்த இடம், எங்கு வேலை எனுமளவிற்கு சினேகம் இறுகிக் கொண்டதாகக் காட்டி, முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் பரி மாறிக் கொள்ளப்படுகின்றன. உள் நோக்கம் உன்னத சினேகமன்று .. அவரது இடத்துக்கு செல்ல நேர்ந்தால் அவருடன் தங்கிக் கொள்ள லாம் என்கின்ற தரமான நினைப்பு ஒன்று தான் .............

காதல் இருமனங்களின் உள்ளார்ந்த ஒரு மென்மையான உணர்வு. அது அந்த இரண்டு உள்ளங்கள் மட்டுமே உணர்கின்ற ஒரு இனம் புரியாத உணர்வு .... அந்த காதல் கூட இங் குள்ள நிலையில் இறுகிக் கல்லாய்க் காட்சி தருகின்றது.... காட்,கார்,பணம் இவை தான் ஐரோப்பிய தமிழ் மனங்களின் காதல்.இங்கே வயது வித்தியாசங்கள் கூட கணக்கெடுக்கப் படுவதில்லை.அனேக காதலின் அடித்தளமாய் இருக்கும் அழகு கூட சில வேளைகளில் புறக்கணிக்கப்பட்டு விடுவது ஆச்சரியத்திற் குரிய ஒன்றாகும். " தொட்டால் தன்னைச் சுருக்கிக் கொள்ளும் தொட்டால் சுருங்கிச் செடியை விட தொட்டால் பற்றிக் கொள்ளும் நாயுருவிச் செடி எவ்வளவோ மேலானது " என்று ஒரு எழுத்தர் தெரிவித்திருந்தார். ஆனால் ஐரோப்பிய தேசத்திற்கு அந்தக் கூற்றிற்கு மறுகலையாக இருப்பது தான் மனதின் மென்மையான உணர்வுகள் விழுங்க ப்படாமல் பாதுகாப்பதற்கு உசிதமான வழியா கும். ஒருவர் சீட்டுப் பிடிக்கின்றார் என்றால் அந்தப் பத்துப் பதினைந்து பேரும் நண்பர்க ளாக, சகோதரங்களாகப் பாவனை செய்கின் றார். ஒருவர் " தமிழ் கடை " திறந்தால் அங்கும் இது போன்றே ....

சில தருணங்களில் பந்தபாசங்கள் கூட பொய் முகங்களால் தோற்றம் தரத்தான் செய் கின்றது.எது எப்படியோ உள்ளத்து உணர்வுகள் உன்னத குணங்கள் ஏற்றுக் கொள்ளப்படாது புறக்கணிக்கப்படுவது கண்கூடு. இந்தப் போலித்தனமான போர்வைகளைப் பார்க்கும் போது வெறும் 10 ரூபாவிற்கு மேல் காணாத எமது பொக்கற்றுக்களுடன் சுற்றித் திரிந்த பால்ய பருவத்தை நினைவுகள் இரை மீட்கத் தான் செய்கின்றது. பெடல் உடைந்த சைக் கிள்களில் ஊர்பூராவும் சுற்றித் திரிந்த நட்பை நினைக்கும் போது மெய் சிலிர்க்கத் தான் செய்கின்றது. " டேய்.. ரமேசு வீட்டில் சமைக்கவில்லையாமடா " என்றால் எங்களை அறியாமலேயே பொக்கற்றிலிருந்த 10 ரூபா, 2 ரூபா, 50 சதம் எல்லாம் ஒன்றாய் சேர்ந்து ரமேசு வீடு சென்று விடும். ஒருத்தனுக்கு காய்ச்சல் வந்தால் மற்றவர்கள் மருந்து குடிப் பது போன்ற அந்த பால்யப் பருவத்து நட்புத் தான் நட்போ.........

வெறும் " பணம் என்ற குறுகிய வட்ட த்துள் இயங்குவதாலோ என்னமோ இன்னமும் நாம் மண்ணில் மட்டுமன்றி எங்கும் வாழ்கி ன்றோம் அடிமைகளாக.. கருத்துப் பரிமாறல் கள் போலித்தனத்துக்கே அதிக இடமளிப்ப தால் புரிந்துணர்வுகள் காணாமல் போய்விடு கின்றன. பணம் சேர்ப்பது குறிக்கோளாகி விட்ட நிலையில் பரிணாம வளர்ச்சிகள் மங்கிப் போகின்றது. எம்மண் இது வரை ஒரு எடிசன், ஒரு மார்க்கோணி அல்லது அரிசுரோட்டில்,சேக்சுபியர், செல்லி, தொலமி பிக்காசோ என்று ஏதாவது ஒரு சிறந்த துறையில் ஒருவரையாவது உருவாக்காமல் போய் விட்டது.காதலிலாவது ஒரு "அம்பிகா பதி-அமராவதி, லைலா-மஜ்னுான், சாசகான் -மும்தாஜ் " என்று ஒரு சோடியையாவது காணாமல் போய்விட்டது. எம்மண் கண்டது செட்டிகளையும், முதலிகளையும் தான். அத்து டன் கூட தற்காலச் சூழ்நிலையில் சில இடியமீன்களையும், கிட்லர்களையும் வளர்த்து எடுத்து வருகின்றது.

மதியுங்கள் மனங்களை இல்லாவிடின் இருந்து
விடுங்கள் தொட்டால்ச் சுருங்கிச் செடியாக .... ?

வல்வை.ச.மதியழகன்.

## உண்மையோ !!

ஏப்ரல் 15 ம் திகதி வட கொரியாவில் மிகப் பெரிய விழா ஒன்று நடைபெற்றது. இந்த விழா வட கொரியாவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு என்று மட்டும் தவறுத லாகக் கூட எண்ணி விடாதீர்கள்.

வேறொன்றுமல்ல ...... வடகொரியா நாட்டு அதிபரின் 80 வது பிறந்த நாள் கொண்டாட்டம் தான். உலக தலைவர்கள், தலைவர்களின் பிரதிநிதிகள், எல்லோரும் இந்த விழாவிற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

40 வருடங்களுக்கு மேலாக வடகொரி யாவை ஆளும் Kim ll sung , இன்றைய அரசியல் உலகில் ஆட்சியிலுள்ள ஸ்ராலினிஸ்ட் என்று மேற்குலக பத்திரிகைகளால் வர்ணிக் கப்படுகிறார்.

www.tamilarangam.net

# புலிகளின் பார்வையில் மனிதம்

**மே 1 இல் இது தேவைதானா ?** என்ற தலைப்பில் கட்டுரையொன்றை சென்ற இதழில் பிரசுரித்திருந்தோம்.

இது குறித்து ஈழநாதம் வானொலி ஒலிபரப்பில் வெளியான "விமர்சனத்தை" வாசகர்களின் பார்வைக்காக இங்கே முன்வைக்கிறோம்.

மேற்படி "இது தேவைதானா" என்ற கட்டுரையில் வெளிவந்த தகவல்கள் அனைத்தும் உண்மையானவைதான் என்பதை மீண்டும் நாம் உறுதிப்படுத்திக்கொண்டோம் - வாசகர்களுக்கும் உறுதிப்படுத்துகிறோம். புலிகளின் பார்வையில் அவை பொய்களாக இருப்பது எமக்கு ஒன்றும் வியப்பில்லை. எம்மைப்பற்றிய அறிமுகத்தை மனிதம் இதழ்-7 இல் நாம் தெளிவுபடுத்தியிருந்தோம். அதை வாசிக்கத் தவறியவர்களுக்கும், வாசிக்க மறுப்பவர்களுக்கும் இது தெரியாமல் போயிருக்கலாம்.

ஈழநாதம் "விமர்சனத்தில்" கடைசிக்கு முதல் பந்தியில் - கனேசலிங்கம் என்பவரின் வீட்டில் அட்டகாசம் புரிந்தது யாரென்பது (தெரிந்தோ தெரியாமலோ) தெளிவாக குறிப்பிடப்படாதது ஒரு கருத்து மயக்கத்தைக் கொடுக்கின்றது. ஏதோ நாம்தாம் அதைச் செய்ததுபோல வாசகர்களுக்கு ஒரு விம்பத்தை ஏற்படுத்திவிடலாம் என்பதை நாம் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இதை வாசகர்கள் மனங்கொள்ளவும்.

குறிப்பு : ஈழநாதம் -சூரிச்சில் உள்ளூர் ஒலிபரப்பு நிலையமொன்றில் வெளிநாட்டவருக்கென ஒதுக்கப்படும் ஒலிபரப்பு வசதியினூடாக (ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை 3 இலிருந்து 4 வரை) இங்குள்ள புலி உறுப்பினர்களால் ஒலிபரப்பப்படும் தமிழ் நிகழ்ச்சியாகும்.

.. ஆ-ர் குழு

மனிதம் வைகாசி ஆனிமாதஇதழில் மேஒன்றில் இதுதேவைதான? என்றதலைப்பில் ஒருகட்டுரை ஒன்றை முதலாளித்துவத்திடம் கையேந்தி நிற்கும் இந்த மாக்சின் நவீனபுதல்வர்களாக இங்கு கால்மாக்சிடம் கடன் வாங்கிய தாடியுடன் காட்சியளித்துக் கொண்டிருக்கும் சிலர் கட்டுரைகளை வரைந்து காட்டமாக தங்களுடைய வக்கிரத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்கள் இவர்களுடைய கட்டுரையின் சிலபகுதிகளையும் அந்தப்பகுதிகள் தொடர்பான விளக்கங்களையும் தருவது எங்களுடைய கடமையாகின்றது.

அண்மையில் சூரிச்நகரில் 1.5.92 காலையில் நடைபெற்ற மேதின ஊர்வலத்தில் இரு தமிழ் அமைப்புக்கள், இயக்கங்கள் கலந்துகொண்டன. இரு அமைப்புக்களும் தமது பலத்தைக் காட்டவும் தமது மேலாதிக்கத்தை நிறுவுவதற்காகவும் நடந்து கொண்டவிதம் ஒவ்வொரு தமிழனும் வெக்கித் தலைகுனிய வைக்கும்படியாக அமைந்தது என்று அவர் மிகவும் பரிதாபப்படுகிறார். அதாவது சூரிச்சிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற எந்த நிகழ்ச்சிகளிலும் விடுதலைப் புலிகள் அமைப்பு ஈழத்தமிழ் மக்களுடைய கலைகலாச்சார முகங்களை அவர்கள் விடுதலைக்காக போராடுகின்ற அந்தப் போராட்டத்தேவையை வெளிப்படுத்து கின்றவகையிலே நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது வழக்கம். இது இங்கு வாழுகின்ற தமிழ்மக்கள் அனைவருக்கும் தெரிந்த, புரிந்த விடயமாகும்.

இந்த நவீனமாக்சின் புதல்வர்கள் இந்த மேதினத்திலே தமிழ்மக்களுடைய முற்போக்கு சக்திகளை தங்களுக்குப்பின்னால் அணி திரட்டிக்கொண்டு இந்தஊர்வலத்திலே பங்கு கொள்ள முடியாமல் ஏன் இருக்கிறது? அதாவது உதாரணமாக அவர்களுடைய மனிதம் இதழிலே மொஸ்கோவில் கொமியுனிஸ்டுக்கள் ஊர்வலம் என்று கூறுகின்றார்கள் அதாவது ரசியாவிலே கொமியுனிஸ்கட்சி தடை செய்யப்பட்டுவிட்டது. தடைசெய்யப்பட்ட சூழ்நிலையிலும்கூட கொமியுனிஸ்டுக்கள் அங்கு மேதின ஊர்வலத்தை நடாத்திஇருக்கிறார்கள். இவர்களுடைய இந்த மனிதம் இதழில் வருகின்ற கட்டுரைகளையும் இவர்களுடைய கருத்துக்களையும் அடிப்படையாக பார்த்துக்கொண்டு இருக்கின்ற போது தமிழீழத்திலேயே நடைபெறுகின்ற போராட்டத்தின் பாலும் தமீழீழ விடுதலை இயக்கத்தின்பாலும் உண்மையிலேயே தமிழ்மக்களுக்கு மிகுந்த அதி திருப்தி எதிர்ப்பு இருக்கின்றது என்பதை பலகாலகட்டங்களிலே இவர்கள் சுட்டிக்காட்டி இருக்கின்றார்கள். ஆகவே தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்திற்கும் த.வி போராட்டத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தின்பாலும் அதிதிருப்தியுற்று இருக்கின்ற இந்த வெளிநாட்டு தமிழர்களை அணிதிரட்டி தங்களால் ஒரு மேதின ஊர்வலத்தை இந்த மாக்சின் நவீன புதல்வர்கள் நடாத்த முடியாத சூழ்நிலையிலேயே தமிழ்தேசிய சுயநிர்நய உரிமைக்கு வலுச்சேக்கின்ற வகையிலேயே விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் சுவிஸ்கிளை நடாத்திய மேதின ஊர்வலத்தைப்பற்றி இவர்கள் விமர்சிக்கபுறப்பட்டது விந்தையிலும் விந்தை.

ஆனாலும் இந்த பத்திரிகையிலே அவர்கள் எழுதியிருக்கின்ற கட்டுரை மூன்றாம்தர இந்திய மஞ்சள்பத்திரிகை எழுதுகின்ற Investigation Story என்று கூறப்படுகின்ற அதாவது ஒரு சம்பவத்தை மிகவும் மிகைப்படுத்தி வாசகர்களுடைய மூன்றாம்தர ரசனையை கிளப்புகின்ற வகையிலேயே அந்தப்பத்திரிகையிலே உண்மைக்குப் புறம்பான அடிதடிப் புரட்டுக்கதைகள் புனைகதை களாக தவழ்ந்தன இந்தச் சூழ்நிலையிலேயே இவர்கள் இங்குள்ள மக்களிடையே முற்போக்கு கருத்துக்களைக் கொடுத்து ஒரு வர்க்கப்புரட்சிக்கு, வர்க்கப் போராட்டத்திற்கு, சர்வதேசபுரட்சிக்கு தாங்கள் இந்த மேற்கத்தேய நாட்டிலேயும் தமிழ்மக்களிடையே வேலைசெய்கிறோம் என்ற ஒரு பொய்யான கோசத்தை இவர்கள் முன்வைக்கின்றார்கள். இவர்களுக்கு நிச்சயமாக எந்த வர்க்கப் புரட்சியற்றியும் உண்மை யான சிந்தனைகிடையாது.

இவர்கள், இவர்களுடைய கடந்தகால வரலாறுகளை நாங்கள் பார்க்கின்றபோது இந்த மனிதம் குழு சீனக்கொமினிஸ்டுக்கட்சியின் சில ஆதரவாளர்கள் தவிர்ந்த அனைவரும் இயக்கங்களுக்கு வேலை செய்தவர்களாக, மற்றைய இயக்கங்களுடன் ஆதரவாளர்களாக இருந்திருக்கிறார்கள். உதாரணமாக இந்த மனிதம் பத்திரிகை ஆரம்பிக்கப்படுவதற்கு சிலகாலங்களுக்கு முன் இந்த P.L.O.T, E.P.R.L.F, போன்ற இயக்கங்கள் தமிழீழத்திலே இயங்கமுடியாத சூழ்நிலை யிலேதான் இவர்கள் தங்கள் நிலைப்பாட்டை சுவிசிலே மாற்றிக்கொண்டவர்கள். அதாவது இவர்கள் வந்து உண்மையான முற்போக்கு சக்திகளாக, விடுதலைப் போராட்டத்தையும் விடுதலை இயக்கத்தையும் விமர்சிப்பவர்களாக இருந்தால் இந்த P.L.O.T, E.P.R.L.F என்ற இயக்கங்கள் உட்கட்சி அராஜகங்களில் ஈடுபட்ட போது உட்கட்சி படுகொலைகளிலே ஈடுபட்ட போது அந்த செயல்களை இவர்கள் யாரும் விமர்சிக்கவில்லை. அந்த இயக்கங்கள் தமிழீழ யுத்தத்திலே இயங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்ட பின் தங்களுக்கு ஒரு முகத்தை தங்களுக்கு ஒரு விளம்பரத்தை ஏற்படுத்தி கொடுக்கும் முகமாகவே இவர்கள் இந்த மனிதம் மூலமான மனிததேடலில் ஈடுபட்டு இருக்கின்றார்கள். இவர்கள் நிச்சயமாக இன்றும் கூட முதலாளித்து வத்திடம் கையேந்தி அதனால் கிடைக்கின்ற பணத்தை வைத்துக் கொண்டு உல்லாசவாழ்க்கையை இங்கு நடாத்திக் கொண்டிருப்பவர்களே யொழிய அங்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற உண்மையான பாட்டாளிவர்க்கத்திற்காக ஒரு சொட்டுக்கண்ணீரையும் விடத் தயாரானவர்கள் என்பதை- தயாரில்லாதவர்கள் (வாசிப்பில் ஒரு தடுமாற்றம்) என்பதையும் தமிழர்கள் இந்த சம்பவத்திலேயே புரிந்து கொள்ள வேண்டும்.

இவர்கள் தொடர்ந்து இந்த கட்டுரையிலே "மேதினத்தை அர்த்தப்படுத்தும் வகையிலே எந்தக் கோசமும் வைக்கப்பட வில்லை. கோசங்கள் சில தனிமனித வாழ்த்துப் பாடின, சில பரஸ்பரம் தனிமனித எதிர்ப்புக் கோசங்களாக இருந்தன." என்று கூறுகின் றார்கள். ஆனால் இவர்களுடைய முதலாவது பக்கத்திலேயே கூறுகின்றார்கள் மே முதல் மொஸ்கோவில் கொம்யூனிஸ்டுகள் ஊர்வலம் என்று இவர்கள் புல்லரித்து நிற்கின்ற அந்த கட்டுரைப் பகுதியிலே கூறுகின்றார்கள் ஊர்வ லங்களிலே சோவியத்யூனியனின் கூட்டமை ப்பின் தலைவர்களான லெனின், ஸ்டாலின் உருவப்படங்களையும் சுத்தியல், அரிவாள் பதித்த செங்கொடியையும் ஊர்வலத்தினர் தாங்கி நின்றனர் என்று புளகாங்கிதம் அடை கின்றார்கள். ஸ்டாலினும், லெனினும் தனிம னிதர்கள் இல்லையா? ஆம் அவர்கள் தனிமனி தர்கள். ஆனால் வரலாற்றிலே தங்கள் முத்தி ரையைப் பதித்துக் கொண்டவர்கள். ஆகவே அங்கேயுள்ள கொம்யூனிஸ்டுகள் இந்த தனிமனிதர்களுடைய படங்களைத் தாங்கி நின்றார்கள்.

அதே போல தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலே தேசியத் தலைவர் பிரபாகரனுடைய பங்களிப்பும் அவர் இந்த வரலாற்றை பாதித்த விதமும் முக்கியமானது. ஆகவே இந்த சந்தர்ப்பத்திலே தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் தமிழீழத் தளத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற சூழ்நிலையிலே வெளிநாடுகளிலே வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழர்கள் அந்த தலைவன் தமிழ்த்தேசியத்தின் குறியீடு என்றபடியால் அந்த தமிழ் தேசியத் தலைவனுடைய படங்களையோ அல்லது அந்த தமிழ் தேசியத் தலைவனை வாழ்த்துப் பாடுகின்ற கோசங்களையோ முன்வைப்பதில் எந்த விதமான பிரச்சனையும் கிடைக்க முடியாது. ஆகவே இது தொடர்பாக தங்களுடைய கருத்துக்கள் விமர் சனங்களை எழுப்புபவர்கள் தங்களுடைய பத்தி ரிகையின் முழுப்பக்கங்களையும் அலசி ஆராய்ந்த பின்பே எழுதுவது மிகப்பொருத்தமானதாகும். மற்றும் இந்தக் கட்டுரையின் பல கட்டங்களில் மிகவும் உண்மைக்குமாறான பொய்கள் எழுதப்பட்டிருக்கின்றன. ஊர்வலம் நகரத்தொடங்கியது **அதற்கிடையில் அம்புலன்சு**

www.tamilarangam.net


வண்டி வந்து கத்திக் குத்துக் காயங்களுடன் ஒருவரை ஏற்றிச் சென்றது என்ற முழுப்பொய் இங்கு கூறப்பட்டிருக்கிறது "ஊர்வலம் முடியும் இடத்தை அண்மித்ததும் P.L.O.T ஐக் காணவில்லை. எங்கோ மறைந்து விட்டனர். புலிகள் கையில் கம்புகளுடன் P.L.,O.T ஐ தேடி அலைந்து கொண்டிருந்தார் கள்" என ஒரு பந்தி குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யினர் ஊர்வலத்தை நடாத்தி முடிந்ததும்; இறுதியாக மக்களுக்கென ஒரு பொதுக் கூட்டத்தை நடாத்தினார்கள். அதே நேரத்தில் ஒரு இந்த மேதின ஊர்வலத்தின் இறுதியில் கசறனை மைதானத்துக்கு மிக அண்மையில் பல நாட்டு அமைப்புக்கள் ஒரு விழாவினை கலை கலாச்சார விழாவினை அதே நேரத்தில் தங்களுடைய பிரச்சார, தங்களுடைய உணவு வகைகளை விற்கக்கூடிய பல கடைகளையும் ஏற்படுத்தி இருந்தார்கள். அந்தக் கடையிலே விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியும் பங்கேற்று தனக்குரிய பங்கை செய்து இருந்தது. அதே நேரத்தில் பிற்பகல் 3 மணி தொடக்கம் 4 மணி வரை ஈழநாதம் ஒலி பரப்பை நடாத்தி இருந்தார்கள். ஆனால் இவர்கள் கூறுகின்றார்கள் புலிகள் கையில் கம்புகளுடன் P.L.O.T ஐ தேடி அலைந்து கொண்டிருந்தார்கள் என்று. ஆனால் உண்மை யிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்திலே எங்களுடைய இயக்கத்திற்காக வேலை செய்பவர் கணேசலிங்கம் என்பவருடைய வீட்டிலே இவர்கள் மிகவும் குடிவெறியுடன் கூடிய கோசங்களுடனும் அதே நேரத்தில் பொல்லுகள் தடிகளுடனும் அவருடைய வீட்டிலே புகுந்து மிகவும் மோசமான முறையிலே நடந்து கொண்டார்கள்.

அந்தச் சந்தர்ப்பத்திலே அந்த வீட்டில் இருந்த பெண்கள் இதனால் மிகவும் பயந்த நிலையிலே காணப்பட்ட சூழ்நிலையும் ஏற்பட்டிருந்தது. ஆனால் இதைத் தொடர்ந்து எந்த விதமான மேற்படி மேற்கொண்டு நடவடிக்கைகளை ஒரு சண்டை தொடர்பான நடவடிக்கைகளை எடுக்கும்படியான சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அங்கத் தவர்கள் ஈடுபடவில்லை. ஆகவே இது தொடர்பான உண்மையை ஈழநாதம் நேயர்கள் விசாரித்து அதே நேரத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினுடைய அமைப்பைச் சேர்ந்தவர்களுடன் கலந்துபேசி சரியான உண்மையை புரிந்து கொள்ள வேண்டும். சரியான சக்திகள் யாரென்று இனங்கண்டு கொள்ள வேண்டும். இந்த மனிதங்கள் யார்? இவர்கள் மனிதத்தன்மையே அற்றவர்கள் என்பதை இந்த கட்டுரைகளின் வாயிலாக நீங்கள் புரிந்து கொண்டு இவர்களை அந்நியப்படுத்துவதன் மூலமே நாங்கள் தமிழ்த்தேசிய விடுதலைக்கும்,தமிழ்த் தேசிய போராட்டத்திற்கும் வலுச் சேர்க்க முடியும் என்று கூறி இத்துடன் இந்த விமர்சனத்தை முடிக்கிறோம்.

8ம் பக்கம்.....

வீட்டு பற்றாக்குறையே சுவிற்சர்லாந்தைப் பொறுத்த வரை பாரிய பிரச்சனையாக உள்ளது. வீட்டு உரிமையாளர்கள் பழைய வீடுகளை இடிப்பதும் நவீனமயப்படுத்தி வாடகையை உயர்த்துவதும் நடைமுறையில் உள்ளது. இவற்றிற்கு எதிராக மிகவும் கடுமையான எதிர்ப்புப் போராட்டங்களை சுவிசு வறிய இளைஞர்களும் ஆங்காங்கே நடாத்தி வருகின்றனர். இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஐரோப்பாவை தொற்றிக் கொண்ட தொற்றுநோய் போல் ஆட்கொண்டிருக்கும் வேலை இல்லாத் திண்டாட்டம் இவற்றிற்கு எல்லாம் தீர்வாகவே ஐரோப்பிய ஒன்றியம்(EG) பற்றிய பிரச்சாரம் முடுக்கிவிடப்பட்டுள்ளது. இவை அனைத்தும் சாத்தியமா? என்பதனை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். டென்மார்க் மக்களின் சர்வசன வாக்கெடுப்புக்களின் பின்னர் ஒப்பந்தத்தில் தளர்வு தேவை என கருதி எவ்விடயங்களை தளர்த்தலாம் என ஆராய்ந்து வருகின்ற அதே வேளை ஐரோப்பிய ஒன்றியம் பற்றிய பிரச்சாரம் மக்களிடையே சரியாக கொண்டு செல்லப்படவில்லை எனவும் ஐரோப்பிய ஒன்றியம் கருதுகின்றது.

• மு. நரேந்திரன்



www.tamilarangam.net

# அறிமுகம்:

## FRIEDRICH DÜRRENMATT

5.1.1921 இல் Konolfingen, சுவிற்சலாந்தில் பிறந்தார்.
5.1.1991 Neuchätel இல் மரணம்.
நாடகாசிரியர்
சிறுகதை எழுத்தாளர்
கட்டுரையாளர்

புகழ்பெற்ற எழுத்துக்கள்:

1) Die Physiker (1961)
2) Der Besuch der alten Dame (1956)
3) Der Richter und sein Henker (1952
4) Die Panne (1956)
5) Das Versprechen (1958)

இவர் "குற்றவியல்" கதைகளின் (Kriminal geschichte ) மூலமே அதிகம் புகழ் பெற்றார் இக்குற்றவியற் கதைகள், குற்றம் புரியும் நபர்களைப் பற்றியல்லாமல் இதன் பின்னணியிலுள்ள இயக்கவியல் நியதிகள் (Erhellung) உளவியல்காரணிகள், நோக்கங்கள், சமூகத் தொடர்புகளில் ஏற்படும் பிறழ்வுகள் பற்றிய ஆய்வுகள் மிகுதியாகக் காட்டப்படுவனவாய் உள்ளன.

அணுவாயுத காலத்தில் எழுந்த நல்ல நாடக வடிவம் "Aristophanes" இன் நகைச்சுவை என்பது அவரது கருத்து.

பிற்கால எழுத்துக்கள் "இருத்தலியல்" தத்துவங்களுடன் கூடியது.
உ-ம்:- Monotaurus. (1985)
தத்துவார்த்த குற்றவியற்சிறுகதை:-
Der Auftrag oder vom
Beobachten des
Beobachters der
Beobacter.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்னரான இலக்கியப் படைப்பாளிகளில் Dürrenmatt உம் வெற்றியடைந்த /புகழ்பெற்ற எழுத்தாளராவார்.

நகைச்சுவை நாடகங்களில் இவரது நகைச்சுவைகள் நாடகஉலகில்: மேடையேற்றல் தில்லு முல்லுகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

நாவல்கள், கட்டுரைகள் எழுதியிருக்கின்றார். அரசியல்கட்டுரைகள் சுவிற்சலாந்தில் கடுந் தாக்கத்தை ஏற்படுத்தின.

சூறிச்சில் பல்கலைக்கழக மாணவனாக இருந்த காலத்தில் எழுத ஆரம்பித்தார்.
இவருடைய ஆரம்பக் கதைகள் Georg Hehm இன் பாதிப்புகளையும், Expressionislische கருத்தியல்களையும் கொண்டிருந்தன.

ஆரம்பகாலக்கதைகள் குறிப்பிடக்கூடிய அளவிற்குப் பாதிப்புகளைத் தராவிட்டாலும், சமூகத்தின் அன்றைய பிரச்சனையான கிட்லரின் பாசிச வளர்ச்சியினால், அயல் நாடான சுவிற்சலாந்தில் இருந்த பய உணர்வை எடுத்துக்காட்டின.
"Der Folterknecht"- சித்திரவதைக் கூண்டு என்ற சிறுகதையில் உலகமே ஒரு சித்திரவதையின் சிறைச்சாலையாகக் காட்டப்படுகிறது. இதில் சித்திரவதை முகாம் கடவுளால் பிரதியீடு செய்யப்படுகிறது.

"சித்திரவதைச் சிறைச்சாலையே கடவுள்- கடவுள் சித்திரவதை செய்கிறார்".
1945 இல் Der Alte- "கிழடு" எனும் சிறுகதை பேர்லினில் பிரசுரமாகியது. இதில் ஒரு சிறிய நிலம் ஒரு அந்நிய இராணுவ பலத்தால் அபகரிக்கப்படுகிறது. இதற்கு எதிரான ஒரு சிறிய நடவடிக்கையும் பயங்கரமாக அடக்கி ஒடுக்கி நசுக்கப்படுகிறது.

1947 இல் இவரது முதல் நாடகம் "Es steht geschrieben" சூறிச்சில் மேடையேறியது. இந்நாடகத்தில் 16 ம் நூற்றாண்டின் 30 களில் நடைபெற்ற ஒரு எதிர்ப்பியக்கக் கதையொன்றை நாடகமாக்கியிருந்தார். இதில் பிரதான கதாபாத்திரமான சன் பொக்கெல்சன் (Jan Bockeljan) உலகின் உன்னத பகுதிகள் அனைத்தையும் தன் ஆட்சிக்குக்கீழ் கொண்டு வருவதற்கு எண்ணுகின்றமையை வைத்து இந் நாடகம் கிட்லரின் பாசிச எதிர்ப்பு என்ற அபிப்பிராயத்தை டூறன்மாட் (Dürren matt) மறுத்துவிட்டார்.

● சுசீந்திரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எமது தேசத்தின் நிகழ்வுகளின் நிதர்சனம்
அந்நிய தேசங்களில் வாழும் எம்மவர்கள்
படிக்க வேண்டிய தரமான சஞ்சிகை.


# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இல 6 அலோசாலை கொழும்பு - 3 தொலைபேசி - 574047.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வடக்கும் தெற்கும் தெற்கும் தெற்கும்

உலகசந்தையும், சர்வதேச நிதியமைப்பும் பணக்காரரை மேலும் மேலும் பணக்காரர் ஆக்கி ஏழைகளை மேலும் மேலும் வறுமையில் தள்ளுகிறது. . 1983ன் தொடக்கத்திலிருந்து மூன்றாவது உலக நாடுகளில் இருந்து மேலும் மேலும் பணம் , அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு வந்து குவிந்ததேயன்றி அபிவிருத்தியடைந்த பணக்கார நாடுகளில் இருந்து ஏழை நாடுகளுக்குப் போய்ச் சேரவில்லை என்பதை U.N.O வின் அபிவிருத்தியடையும் நாடுகள் பற்றிய ஏப்ரல் 92ல் வெளியான ஆய்வறிக்கை வெளியிட்டுள்ளது.

!! இவ்வாறான ஆய்வறிக்கையின் பெறுபேறுகள் பற்றிப் பணக்கார நாடுகள் அலட்டிக்கொள்வதேயில்லை, இவர்கள் அலட்டிக் கொள்வதற்கான காரணங்களும் இல்லாமலில்லை. ஏதோ அபிவிருத்தி உதவி
யென்றெல்லாம் மூன்றாவது உலக நாட்டையும் தங்கள் மக்களையும் நம்பவைக்கும் நாடகத்தை அழகாகவே அரங்கேற்றிக் கொள்ளும் இவர்கள் இலாபமீட்டுவதில் எவ்வாறு தங்கள் அமைப்புக்களைக் காலத்திற்கு காலம் தேவைக்கேற்பச் சீர்திருத்துகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு தங்களது நாட்டவர் மூன்றாம் உலக நாட்டவரை நம்பவும் வைத்துக் கொள்கின்றனர். சுதந்திர உலக சந்தை எனக் கூறிக் கொள்ளும் இவர்களது அமைப்பு தொழில் வளர்ந்த நாட்டவர்கள் மட்டும் சுதந்திரமாக இலாபமீட்டுவதற்கானது. மூன்றாவது நாட்டவர்கள் தங்களது உற்பத்தியில் மேலாண்மை பெற்ற சில உற்பத்திகளைக் கூட தொழில் வளர்ந்த நாடுகள் தங்களுடன் போட்டி போட இயலாதவாறு சந்தைத் தடைகளை விதித்து வைத்துள் ளனர். 24 தொழில் வளர்ந்த நாடுகளில் 20 நாடுகள் இவ்வாறான நடவடிக்கைகளால் 3வது உலக நாட்டின் உற்பத்திகளைச் சந்தைகளில்லாமல் முடக்கியதால் மூன்றாவது உல நாடுகள் வருடமொன்றிற்கு இழப்பது 500 மில்லியன் டொலர்கள்!

!! மூன்றாவது உலக நாடுகள் தங்கள் கடன்களுக்கு அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் பார்க்க 4 மடங்கு வட்டியாக செலுத்துவதுடன் உலக சந்தையில் இலாபமீட்ட இயலாது முடக்கப்பட்டிருப்பதாலும் வருடமொன்றிற்குத் தங்கள் கடன்களுக்காகத் தொழில் வளர்ந்த நாடுகளுக்கு 1983ல் இருந்து 21 பில்லியன் டொலர்களை முன்பிலும் பார்க்க அதிகமாகச் செலுத்திக் கொண்டிருக்கின்றனர். இதில் வேடிக்கை என்னவென்றால் அசலான கடன் ஆனது, வட்டியிலும் பார்க்க மிகமிகக் குறைவே, அத்துடனல்லாது சர்வதேச நாணய சபை வருடமொன்றிற்கு 6 மில்லியன் டொலர்களை கூடுதலாக தங்களது அசல் கடன் தொகையிலும் பார்க்க இலாபமாக வாரிக்கொண்டிருக்கிறது.

!! வறிய நாடுகள் பாரிய உற்பத்திப் பொருட்களை உலக சந்தையில் வாங்குவதற்கு தங்களது மூலப்பொருட்களை உலக சந்தையில் விற்கவேண்டிய நிர்ப்பந்தமிருப்பதால் மூன்றாவது உலக நாடுகளின் மூலப்பொருட்களின் விலை கட்டுப்பாடில்லாமல் வீழ்ந்துகொண்டே போகிறது.

!! இவ்வாறான இடர்பாடுகளால் கடந்த முப்பது வருட காலங்களில் பணக்கார நாடுகளுக்கும் ஏழை நாடுகளிற்குமான இடைவெளி மேலும் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. உலகின் பணக்கார குடிமக்கள் மொத்த சனத்தொகையில் 1/5 பங்கு. இவர்களது வருமானம் ஏழைகளுடன் ஒப்பிடும்போது 140 மடங்கு அதிகமாக இருக்கிறது.

 → 26 ம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




மனிதம் ஆசிரியருக்கு!

மனிதம் 16 இல் அழிஞ்சிப்பொத்தனை, கரபொல, முத்துக்கல கிராம அழிப்பு சம்பந்தமாக எழுதப்பட்டுள்ளது. அது சம்பந்தமாக சில தகவல்களைக் கூறலாம் என நினைக்கிறேன்.

விடுதலைப்புலிகள் இக்கிராமத்தை முன்கூட்டியே அழிப்பதற்கு திட்டமிட்டு வந்தனர். இதற்காக அழிஞ்சிப்பத்தனை கிராமத்தில் உள்ளவர்களின் விபரங்களை அருகில் உள்ள கிராமத்திலிருந்து வேலைக்குச் செல்வோர் மூலமும், தபாற்காரர் ஒருவர் மூலமும் திரட்டினர். முக்கியமாக அங்குள்ளவர்களின் வயதெல்லையை அறிவதில் முக்கிய கவனம் செலுத்தியுள்ளனர். முசுலீம் கிராமத்தில் நுழைந்து படுகொலை செய்த இரவு அருகிலுள்ள சிங்கள கிராமத்தில் காணிவெல் பார்ப்பதற்காக அனேக பொலிசாரும், ஊர்காவற்படையினரும் சென்றுவிட்டனர். கடமையில் சிலரே இருந்தனர். இது புலிகளின் அழிப்புக்கு மிகவும் சுலபமாகப் போய்விட்டது. விடுமுறையில் சென்றிருந்த இரு ஊர்காவல் படையினர் சம்பவம் நடந்த இரவு மோட்டார் சைக்கிளில் அக்கிராமத்திற்கு திரும்பும்போது, இராணுவத்தினர் வருவதாக நினைத்து புலிகள் பின்வாங்கினர். புலிகள் அக்கிராமத்தினுள் நுழைவதைக் கண்ட கடமையிலிருந்த பொலிசாரும், ஊர்காவல்படையினரும் தப்பி ஓடி விட்டனர். இருப்பினும் நடந்த சிறு மோதலில் ஒரு புலி உறுப்பினர் கொல்லப்பட்டார். இவருக்கு புலிகள் யாழ்நகரில் அஞ்சலி செலுத்தினர். பத்திரிகையில் தாம் கைப்பற்றிய ஆயுதங்களின் விபரங்களுடன் மேற்படி உறுப்பினரின் அஞ்சலியும் வெளிவந்துள்ளது. இதிலே இன்னோர் விடயத்தையும் குறிப்பிடவேண்டும். இந்த முசுலீம் கிராம மக்கள் முன்பு சுதந்திரன் பத்திரிகை வெளிவந்த காலத்தில், வீரகேசரி பத்திரிகை வாசிப்பதிலும் பார்க்க சுதந்திரன் பத்திரிகையில் கூடிய அக்கறை காட்டியவர்கள். இவர்கள் எழுபதுகளின் இறுதியில் தமிழ் தேசிய எழுச்சியுடன் உணர்வு ரீதியாக இரண்டறக் கலந்து இருந்தவர்கள். இங்கு நான் "சுதந்திரன்" தமிழ் தேசிய எழுச்சியின் குறியீடு எனும் கருத்தில் குறிப்பிடவில்லை.

முசுலீம் கிராம படுகொலையில் 50 க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இதில் சிங்கள மக்களும் கொல்லப்பட்டதாக வதந்தி பரவியதை தொடர்ந்து சில ஊர்காவல்படையினரும், சில முசுலீம்களும், அருகிலுள்ள சிங்கள கிராமத்திலிருந்த சில சிங்களவர்களும் அருகிலுள்ள தமிழ் கிராமங்களில் படுகொலையை செய்தனர். இக்கிராமத்திலிருந்த பல தமிழ் மக்கள் அருகில் உள்ள காட்டுக்குள் தப்பி ஓடிவிட்டனர். அப்படியிருந்தும் 54 பேர் கொல்லப்பட்டனர்

பின்னர் இராணுவத்தினர் வந்துதான் நிலமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இந்த தமிழ் கிராமத்திற்கு புலிகள் வந்து போவதை முன்பே அறிந்திருந்த T.E.L.O உறுப்பினர்கள் இக் கிராம மக்கள் மீது ஆத்திர உணர்வுடன் இருந்து வந்தனர். ரெலோ உறுப்பினர்கள் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட பின் அக்கிராமத்திற்கு வந்து தப்பி இருந்தோரை விசாரித்து, ஏனையோர் காட்டுக்குள் தப்பி ஓடியதை அறிந்து, காட்டுக்குள் சென்று 40 ற்கு மேற் பட்டோரை படுகொலை செய்ததாக ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன. முன்பு மட்டக்களப்பில் இருந்த முனாசு எனப்படும் ஒரு இராணுவ அதிகாரிதான் தமிழ் இயக்கங்களை முன்பு கையாண்டு வந்தார். இவர் முன்பு அப்பாவி இளைஞர்களை பிடித்து பின்பு பணம் பெற்றுக்கொண்டு விடுதலை செய்வார். இதற்கு ரெலோவும் மட்டக்களப்பில் உடந்தையாக இருந்து வந்தது. அந்த முனாசு எனப்படும் இராணுவ அதிகாரிதான் தற்போது சித்தாண்டி பகுதியில் இருக்கிறார். இவருடைய ஒத்துழைப்புடன்தான் ரெலோவினர் காட்டுக்குள் சென்று தமிழ் மக்களை படுகொலை செய்தனர் என கூறப்படுகின்றது. இதுவே நடந்து முடிந்த சம்பவங்கள்.

இன்றைய கட்டம் வடக்கு கிழக்கு இணைப்பிற்கு ஆதரவாக புலிகளும் முசுலீம்களும் ஐக்கியமாக குரல் எழுப்பும் கட்டமல்ல. தமிழ் மக்களும், முசுலீம்மக்களும் புலிகளால் பலவந்தமாக எதிரி களாக்கப்பட்டுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இணைப்பிற்கான சாதகமான அம்சங்கள் புறவயத்தே இல்லாத போது அரசு வலிந்து இப்படி ஒரு தாக்குதலை செய்ய வேண்டிய தேவை இல்லை. புலிகளின் 'சமாதானமே எமது விருப்பம்' என்ற கூற்றுத்தான் இன்று அரசுக்கு பெரிய பிரச்சனை என நீங்கள் கருதி, அரசு முசுலிம் மக்களை கொலை செய்திருக்கலாம் என ஊகித்து எழுதியிருக்கிறீர்கள். அதற்கான சான்றுகளை தேட முற்படுகின்றீர்கள்.

சரியான தகவல்கள் கிடைக்காத நிலையில் ஊகத்தின்பேரில் சந்தேகங்களை கிளப்புவது, தவறான எண்ணங்களை ஏற்படுத்துவது தவறானதாகும். இது பத்திரிகை தர்மம் ஆகாது. நீங்கள் திட்டமிட்டு பிழையான தகவல்களை பரப்புவதாக நான் நினைக்கவில்லை. இலங்கையிலிருந்து வெளிவரும் தினசரிப் பத்திரிகைகள் போல் மறுபுறத்தில் தமிழ் முற்போக்கு பத்திரிகையான சரிநிகரும் பொய்யான தகவல்களை வெளியிட்டுள்ளது. இந்நிலையில் நீங்கள் இன்னோர் நாட்டில் இருந்து சரியான தகவல்களை பெற்றுக்கொள்வது கடினம் என்பது எனக்குத் தெரியும்.

எனினும் நீங்கள் இறுதியில் கூறிய கருத்துக்கள் மிகவும் சரியானவை.

கொலைகளைச் செய்தவர்கள் யாராக இருந்தாலும் இப் படுகொலைகளும் விடு தலைப்புலிகளின் தொடர்ச்சியான முசுலீம் எதிர்ப்பு நடவடிக்கைகளும் வடக்கு கிழக்கு இணைப்பிற்கு எதிரான வலுவான காரணிகளே!

சுப்பிரமணியம்
இலங்கை

# ஜனநாயகப் படுகொலை ஒன்றுக்காய் ---

அன்று மாலையிலே
காட்டுக் குருவியொன்று
சோகமாய்க் கத்தியது
முற்றத்து பூ வரசு
முகத்தைத் திருப்பியது

அடுத்த வீட்டுப் பெரியவர்
அடுக்கினார் சொற்களை
சட்டநாதர் வீதியிலே
சரியான இளந்தாரி
சரிந்து கிடக்குதென்று

ஏன் நினைத்தேன் உன்னை
அராஜகத்திற் கெதிராய்
அகிம்சையாய்ப் போராடிய நீ
குற்றவாளியா ?

பேதங்கள் தானின்றி
அனைவர்க்கும் ஒளி தந்த
சூரியன் ஒன்று
அநாதரவாய்த் தெருவினிலே
அனைந்து இருப்பதுதான்
இன்றைய நீதியாம்
அனைத்தவரின்
நியாயம் தான் அது

உன் மரணத்தினால்
மௌனங்கள் வெளியில்தான்
அகங்கள் எல்லாம்
ஆய்வு செய்து
அறிக்கையை சமர்ப்பித்தது
நீ நியாயத்திற்காய்
போராடியதாய் !

ஜெகன்

www.tamilarangam.net

## சுவடுகள் மீது தாக்குதல்!

ஒஸ்லோவில் நிகழ்ந்த மேதினக் கூட்டத்தைப் பார்வையிடச் சென்றிருந்த சுவடுகள் ஆசிரியர் ஒருவர்மீது, புலிகளின் சின்னங்கள் விற்ற மற்றும் துண்டுப் பிரசுரங்கள் வினியோகித்த விடுதலைப் புலிகள் நால்வர், விடுதலைப் புலிகளின் சின்னங்களை (badge) வாங்க மறுத்தமைக்காக தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மேதினக் கூட்டம் நிகழும் 'உங்ஸ்தூர்க' சதுக்கத்தில் பல ஆயிரக்கணக்கான நோர்வேஜியர்களும், வேற்றுநாட்டவரும் கூடியிருந்த வேளையிலேயே இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. இச்சம்பவம் நிகழ்ந்த இடத்தின் அருகிலிருந்த நோர்வேஜிய மக்கள் சம்பவம் பற்றித் தமது அதிருப்தியை வெளியிட்டனர்.

சுவடுகள்மீது நடாத்தப்பட்ட இந்தத் தாக்குதலுக்கான தார்மீகப் பொறுப்பை இங்குள்ள புலிகள் ஏற்கவேண்டும்.

மக்கள் மீதான வன்முறைகளை நாம் தொடர்ச்சியாகக் கண்டித்து வந்துள்ளோம். இங்கு வாழும் ஒவ்வொரு தமிழர்களதும் சட்டவிரோத நடவடிக்கைகளும், வன்முறைகளும் இந்த நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் எமது சமூகத்தைப் பெருமளவில் பாதிக்கக்கூடியன. தாம் கொண்டிருக்கும் அரசியற் கருத்துக்காக எவராவது தாக்கப்படுவது, மற்றவரின் கருத்துக்கு மதிப்பளித்து அமைதியான வழிகளில் ஜனநாயகம் பேணும் நோர்வே நாட்டவரின் மனதில் தமிழர் பற்றி மிக மோசமான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும். இவ்வாறான சம்பவங்கள் நடக்காது பாதுகாப்பது ஒவ்வொருவரதும் தனிப்பட்ட கடமையுமாகும். ஏற்கனவே வன்முறைகள், மோசடிகள் நிறைந்த ஒரு சமூகமாக அறியப்படுகிற எமது சமூகம் மேலும் மோசமாகப் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டுமெனில் நாம் மிகப் பொறுப்புடனும், ஜனநாயக வழிகளுடனும் நடந்துகொள்ள வேண்டும். பொது அமைப்புகளும் அரசியல் அமைப்புகளும் இது தொடர்பாக மிக அவதானமாகத் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே எமது விருப்பம்.

கருத்துகளால் மாத்திரமே யாரையும் வென்றெடுக்க முடியும், வன்முறையாலல்ல என்பதை இச்சமயத்தில் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

தகவல் - சுவடுகள் ●

பிந்திய செய்தி:

"சுவடுகள்" மேதினச் சம்பவம் பற்றி வெளியிட்ட செய்தியை மீளப்பெறுவதுடன் அவ்வாறு வெளியிட்டதற்காக மன்னிப்புக் கோராவிடின், சுவடுகளைத் தொடர்ந்து வெளிவர தாம் அனுமதிக்கப்போவதில்லை என மிரட்டிச் சென்றுள்ளனர்.

www.tamilarangam.net



Suharto (இறப்பு)
**இந்தோனேசியா**
25.5 மில்லியார்டன் பிராங்குகள் சுவிசிலும், இங்கிலாந்திலும்



Jean B. Bokassa
**மத்திய ஆபிரிக்கா**
அனைத்துப் பெறுமதிமிக்க வைரங்கள் சுவிசில்.



Reza Pahlevi (இறப்பு)
**ஈரான்**
5.7 மில்லியார்டன் பிராங்குகள். 25 சுவிசு வங்கிகளில் இடப்பட்டுள்ளது.



Nicolae Ceausescu(இறப்பு)
**ருமேனியா**
600 மில்லியன் பெறுமதியான தங்கம் சுவிசில்



Seke Mobuto
**சையிர்**
6 மில்லியார்டன் பிராங்குகள்



Abu Nidal
**பாலசுதீனர்**
பல மில்லியன் பிராங்குகள் நண்பர்கள் பேரில் சுவிசில்

—> 17 ம் பக். தொடர்ச்சி

எப்போதுமே தங்களை விட திறமையுள்ள தனித்துமான ஆளுமையுள்ள எவரைக் கண்டாலும் சந்தேகித்து பீதியுற்று அவர்களை தீர்த்துக்கட்டும் செயற்பாட்டையே தமது கொள்கையாகக்கொண்ட இக் கேடுகெட்ட கொடியவர்களுக்கு திரு. சேந்தனும் இன்று இரையாகிவிட்டார்.

தமிழ்ப்புலமை பெற்ற திரு. பண்டிதர் வீரகத்தியின் மூத்தபுதல்வரான இவர் மூன்று குழந்தைகளின் தந்தை. தனது கடுமையான உழைப்பினால் உடல்நலம் குன்றியவர். எந்தகடுமையான வேலைச்சுமைக்கு மத்தியிலும் தன் குழந்தைகளுடன் சிறிது நேரமாவது மனம்விட்டு பேசிமகிழும் ஒரு ஆழமான பாசமுள்ள தந்தை இவர்.

கடந்த சித்திரை மாதம் 14ம் திகதி கற்சிலைமடுவில் வைத்து விசாரணைக்காக புலிகளால் கைது செய்யப்பட்டார். ஒன்றரை மாதங்களாகியும் விடுவிக்கப்படவோ எவருக்கும் காட்டப்படவோ இல்லை. இதுவரை அவரை விடுவிப்பதுபற்றி தீர்க்கமாக புலிகளால் எதுவுமே கூறப்படவுமில்லை. திரு.சேந்தன் அவர்களை அறிந்த அவரை நேசித்த நெஞ்சிலே ஈரமுள்ள அனைவரும் ஒன்றுசேர்ந்து உரத்துக்கேட்கிறோம்

**# புலிகளே ! எங்கள் சேந்தன் எங்கே ?**

**# உடனே அவரை விடுதலை செய்யுங்கள் !**

**# அவரைப் போன்றே நீங்கள் அடைத்து வைத்திருக்கும் ஆயிரக்கணக்கான மனச்சாட்சியின் கைதிகளையும் விடுதலை செய்யுங்கள் !**

01. 06. 92 ஈழம்

திரு. சேந்தன் அவர்களை அன்போடு நேசிக்கும் நண்பர்கள்.

www.tamilarangam.net

# தண்டனை

பங்கருக்குள்
துரோகிகள்
பார்த்துக் கொள் !

இவர்கள் சாகாதிருக்கும் வரை
உன்
சாதனை எல்லாவற்றையும்
செய் !

மூடிய தகரத் துவாரத்தினால்
மூத்திரம் பெய் !
முடிந்தால்
கொடுக்கனோ
மட்டத்தேளோ
தூக்கிப் போடு !

வேண்டாம் :
பாம்பை மட்டும் விட்டுவிடாதே
துரோகிகள்
விரைவில் செத்துவிடுவர்.

கேள் !
முதலிரவில்
எத்தனை முறை
மனுசியுடன் படுத்தாய் ?
சொல்லாவிடில்
சொல்லும்வரை
கசக்கிப் பிழி !

அவர்கள்
துடிப்பதும்
குளறுவதும்
கேட்பதற்கரிய சங்கீதம் அல்லவா
கேட்டுப் பார் !



( அன்மையில் எம் தாய் மண்ணில் இருந்து கிடைக்கப்பெற்ற **"ஆயுதங்களின் மேல் காதல் கொண்ட மனநோயாளிகள்"** எனும் சிறு நூலின் பாதிப்பினால் எழுந்த படைப்பு. )

-- தீரன் --

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்